Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் - ஆண்டு 2045 பங்குனி 02 ஞாயிற்றுக்கிழமை (16.03.2014) பக்கங்கள் 20 ஓசை - 166

பிரேம் அச்சகம்
127, KKS Road
யாழ்ப்பாணம்

08



கைவிடப் பட்டது

18



தொடரும் மர்மம்

## கல் ஏற்றி வந்த ரயில் மோதி கொடிகாமத்தில் இளைஞர் பலி

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பகுதியில் ரயில் பாதை புனரமைப்புக்கென கல் ஏற்றிவந்த ரயிலுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்து ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட இளைஞர் ஒருவர் மோதி விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

நேற்றுக்காலை 9.00 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் கொடிகாமத்தைச் சேர்ந்த கட்டடத் தொழிலாளியான சிவராசா ஜெகன் (வயது - 32) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

வழமைபோல் தொழிலுக்கு புறப்பட்ட அவர் மிருசுவில் வைத்தியசாலைக்கும் கொடிகாமம் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் ரயில்

19 ஆம் பக்கம் பார்க்க

# சங்கானையில் ஆரம்பமானது மகளிர் சுயதொழில் பயிற்சி



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பெண்களுக்கான சுயதொழிலை மேம்படுத்தும் (பற்றிக்) பயிற்சி திட்டத்தினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வு சங்கானையில் நேற்று இடம்பெற்றது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் தேசிய அருங்கலைகள் பேரவையின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அமைச்சு ஒரு மில்லியனும், தேசிய அருங்கலைகள் பேரவை ஒரு மில்லியனும், றோட்டறிக் கழகம் ஒரு மில்லியனுமாக மூன்று மில்லியன் ரூபாவில் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## கிரிக்கெட் போட்டியில் மோதல்

# அடித்துக் கொல்லப்பட்டார் பற்றிக்ஸ் பழைய மாணவன்

## வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் துயரம்



(யாழ்ப்பாணம்)

யாழ். பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களுக்கும் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களுக்கும் இடையே வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ண 50 ஓவர் கிரிக்கெட் போட்டியின் போது ஏற்பட்ட மோதலில் பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவன் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

இதனையடுத்து அங்கு நடைபெற்ற கிரிக்கெட் போட்டி நிறுத்தப்பட்டது. இந்தச் சம்பவத்தில் யாழ். குருநகர் கரித்தல் லேனில் வசித்துவந்த தனுசன் அமலன் (வயது - 24) என்ற பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவனே கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இவரது சடலம் வட்டுக் கோட்டை பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று பிற்பகல் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்றுக்காலை பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டு யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்திற்கான 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை நண்பகல் 12.00 மணியளவில் பழைய மாணவர்களிடையே ஏற்பட்ட முறுகல், மோதலாக வெடித்ததால் சென். பற்றிக்ஸ் பழைய மாணவன் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இதனைத் தொடர்ந்து கிரிக்கெட் போட்டி இரு கல்லூரி அதிபர்களின் தீர்மானத்திற்கு இணங்க இடைநிறுத்தப்பட்டது.

மேற்படி விடயம் தொடர்பாக யாழ்ப்பாணக் கல்லூரியின் புதிய அதிபர்

19 ஆம் பக்கம் பார்க்க

## பாடசாலை மாணவர்களை துரத்திய யானைக்கூட்டம்

### புத்துவெட்டுவானில் சம்பவம்

(துணுக்காய்)

புத்துவெட்டுவான் - துணுக்காய் வீதியில் நேற்று, மாலை நேர வகுப்பை முடித்து வீடு திரும்பிய மாணவர்களை யானைக்கூட்டமொன்று துரத்தியதில் அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓடியதில் விழுந்து காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நேற்றைய தினம் விடுமுறை நாளானபடியால் புத்துவெட்டுவான் ஜயன்கன்குளம் பழைய

19 ஆம் பக்கம் பார்க்க

## தீர்மானத்திற்கு ஆதரவு இந்தியாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்திற்கு இந்தியா தனது ஆதரவை வழங்க வேண்டுமென பிரிட்டன் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தற்போது பிரிட்டனுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக், அவருடன் நடத்திய பேச்சுக்களின்போதே மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# அடிப்படையற்ற விதத்தில் இலங்கை மீது குற்றச்சாட்டு

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மூன்று தசாப்தங்களாக நீடித்து வந்த யுத்தம் நிறைவடைந்து நாட்டில் அமைதி ஏற்பட்டுள்ள நிலையில், யுத்த நிறைவின் பின்னராக ஏற்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் உதாசீனம் செய்யப்படுவதுடன், இலங்கை மீதும் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யுத்தம் நிறைவடைந்த பின்னர் இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளதுடன் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்கள் சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு எதிரான பல குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை. கிளிநொச்சியில் கைது செய்யப்பட்ட ஜெயகுமாரி சம்பவம் தொடர்பில் ஆதாரங்களையே நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கு முன்னதாக சரியான தகவல்களை பெற்றுக் கொண்டு அவற்றை ஆராய வேண்டியது அவசியமானது.

சனல் 4 ஊடகம் நாட்டுக்கு எதிராக அடிப்படையற்ற வகையில் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகிறது. சனல் 4 ஊடகத்தின் தகவல்கள் போலியானவை.

மெய்யான தகவல்களைக் கொண்ட ஆவணங்களை வெளியிட்டிருந்தால் அது குறித்து விசாரணை நடத்தியிருக்க முடியும்.

19 ஆம் பக்கம் பார்க்க

## போர் முடிவிற்கு வந்த பின்னர் இலங்கை கணிசமான முன்னேற்றம்

### பாராட்டுகிறது சீனா



(கொழும்பு)

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக சீன அரசாங்கம் பாராட்டு தெரிவித்துள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டத்தை நேற்றைய தினம் திறந்து வைக்கும்

19 ஆம் பக்கம் பார்க்க

## சட்டவிரோத கைதை கண்டித்து வவுனியாவில் கவனயீர்ப்பு போர்



(வவுனியா)

சட்டவிரோதக் கைதுகளைக் கண்டித்தும், காணாமற் போனோர் தொடர்பில் அரசை பதிலளிக்குமாறு கோரியும், வவுனியா நகரப் பகுதியில் HDFC வங்கிக்கு முன்பாக நேற்று முற்பகல் 11.30 மணிக்கு மாபெரும் கவனயீர்ப்பு

19 ஆம் பக்கம் பார்க்க

# கரவெட்டிக்கு புதிய சந்தைக் கட்டடம்; உதயன் எம்.பி.க்கு நன்றி தெரிவிப்பு

மக்களின் வேண்டுகோளிற் கமைவாக பிரதேச சபை சந்தைக் கட்டடத்தொகுதிக்கு நிதி பெற வழியமைத்த நர்டாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரினுக்கு மக்கள் சார்பாக மீளாய்வுக்கூட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலர் நன்றி தெரிவித்தார்.

கரவெட்டி பிரதேசசபையின் சந்தைக் கட்டடத் தொகுதியால் வியாபாரிகள் மற்றும் பொது மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தார்கள். இதனையடுத்து கரவெட்டிப் பிரதேச செயலர், பிரதேசசபை தவிசாளர், வியாபாரிகள் பொதுமக்கள் ஆகியோரினால் வடமாராட்சிப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும், ஈ.பி.டி.பி:யின் நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரினிடம் (உதயன்) முன்வைத்த கோரிக்கையினையடுத்து மேற்படி பிரதேசத்திற்குரிய புதிய சந்தைக்கட்டடத் தொகுதிக்கு நிதியினைப்பெற்றுத் தந்தமைக்காக அனைவர் சார்பாகவும் பிரதேச செயலரால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து இடம் பெற்ற பிரதேச அபிவிருத்தி மீளாய்வுக்கூட்டத்தில் பொது மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. இதன் போது பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லும் பெண்களுடன் உடுப்பிட்டிச் சந்தி, நாவலடிசந்தி, சந்நிதிச் சந்தி ஆகிய பிரதேசங்களில் இளைஞர்கள் நின்று மிக கேவலமான வசனங்களை பிரயோகிப்பது மற்றும் அங்க சேஷ்டைகள் புரிவது அதிகமாகக் காணப்படுவதாகவும் தாங்கள் இது சம்பந்தமாகக் குறித்த பிரதேச பொலிஸாரிடம் முறையிட்டபோதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும், மாறாகத் தாம் முறைப்பாடு செய்யும் போது குறித்த இளைஞர்களிடம் முறைப்பாடு செய்பவர்களின் பெயர்களைச் சொல்வதாகவும் பொதுமக்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆதங்கம் தெரிவித்தனர்.



மேற்படி விடயம் தொடர்பாக பொலிஸார் மிகுந்த கவனம் எடுக்குமாறும் பாடசாலை, தனியார் கல்விநிலையங்களிற்கு மாணவர்கள் செல்லும் நேரங்களில் பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்துமாறும் இவ்வாறான செயல்கள் ஊடாக் குற்றச்செயல்களைத்தடுக்க முடியும் எனவும் பொலிஸ் அதிகாரிக்கு ஒருங்கிணைப்புக்குழுத்தலைவரும், ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரான சில்வேஸ்திரி அலன்ரினால் (உதயன்) அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து 'குடிநீர்ப்பிரச்சினை சம்பந்தமாக பொது மக்களால் தெரிவிக்கப்பட்டபோது குறித்த திணைக்கள அதிகாரி கருத்து தெரிவிக்கையில் யாழ். மாவட்டத்தில் பரவலாக குடிநீர் பிரச்சினை காணப் படுவதாகவும் மேற்படி பிரச்சி னையைத் தீர்க்க இரணைமடு குடிநீர் விநியோகத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதெனவும், மேற்படி திட்டமானது வடமாகாணசபை தேர்தலின் பின் சில விரும்பத்தாகாதவர்களின் செயற்பாடுகளின் ஊடாக பல தடைகளைச் சந்தித்து வருவதாகவும் தெரிவித்ததுடன், இத்திட்டம் செயற்படுத்தப்படாவிடின் எதிர்காலத்தில் குடிநீர் அற்றதோர் பாலைவனமாக சில பிரதேசங்கள் மாற்றமடையும் நிலை உள்ளது.

இதனைத் தொடர்ந்து பொது மக்களின் அத்தியாவசியத் தேவைகள் மற்றும் போக்குவரத்து, மின்சாரம், சமுர்த்தி, கால்நடை உற்பத்தி, அரசசார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் போன்றவை தொடர்பாக ஆராயப்பட்டது.

இக்கலந்துரை யாடலினை தொடர்ந்து கரவெட்டிப் பிரதேசசபை நவீன கட்டடத் தொகுதியின் கட்டுமான வேலைகளினையும் நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டார்.


## மணிவிழா வாழ்த்து

15.03.2014



### திரு.கந்தப்பு கோவிந்தப்பிள்ளை

(நூலகப் பணியாளர், யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்)

**சேவை விபரம் :**

1994-1999 கோட்டக் கல்விப் பணிமனை, நெடுந்தீவு.

1999-2004 நூலகப் பணியாளர் - யா/வேலணை மத்திய கல்லூரி.

2004-2014 நூலகப் பணியாளர் - யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்.

எமது பாடசாலையில் நூலகப் பணியாளராகச் சிறந்த சேவையினையாற்றி ஓய்வு பெறும் திரு க.கோவிந்தப்பிள்ளை அவர்களை பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்தி நிற்கின்றோம்..

பாடசாலைச் சமூகம்

யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்

R/343



## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 239 | திகதி 2014.03.14 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

28 46 55 61 V

பரிசுத் தொகை ரூபா. 14,796,540/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 12 | 600,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 219 | 219,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 403 | 403,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9869 | 592,140/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 5281 | 211,240/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 128828 | 2,576,560/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 18666 | 373,320/- |
| நான்கு இலக்கங்களை மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 14,796,540/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,975,260/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 15,048,900/-

2014.03.18ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02.

தொ.பே: 011 2333546/47

(C/3359)

web : www.dlb.lk


## 4 சைக்கிள்களைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரிக்கும், சென்.ஜோண்ஸ் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டப் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று இடம்பெற்றுக்கொண்டிருந்த போது இதனைப் பார்வையிட வந்தவர்களின் நான்கு சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளன.

பூங்காவிற்கு முன்பாக சைக்கிள்களை நிறுத்தி விட்டு போட்டியைப் பார்த்து விட்டு சில மணித்தியாலங்களில் திரும்பி வந்து பார்த்தபோது இத் துவிச்சக்கர வண்டிகள் திருட்டுப் போயுள்ளமை தெரியவந்துள்ளது. (48)

## தாச்சிப் போட்டி

(அளவெட்டி)

அளவெட்டி கும்பலை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டிகளின் இறுதிப் போட்டி இன்று மாலை 3.30 மணி முதல் அளவெட்டி கும்பலை பார்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் முதலாவது திறந்த போட்டிகளின் இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழகமும், பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணியும் மோவுள்ளன.

அழைக்கப்பட்ட ஏனைய அணிகளுக்கிடையிலான போட்டியின் இறுதிப் போட்டியில் கோண்டாவில் மறுமலர்ச்சி அணியும், தையிட்டி வள்ளுவர் அணியும் மோதவுள்ளன.

இந்நிகழ்வில், வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சொ.சுகிர்தன், யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் தலைவர் சண்முகநாதன் 'ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (48)

## கௌரவிப்பு விழா

(வேலணை)

சரவணை பள்ளம்புலம் முருக மூர்த்தி சனசமூக நிலையத்தினால் நடத்தப்படுகி ன்ற பெரியார்களைக் கௌரவிக்கும் விழாவும், கடந்த வருடம் நடை பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் விழாவும் இன்று காலை 10.00 மணியளவில் முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் வேலணைப் பிரதேச செயலகத் தொழில்நுட்ப அலுவலரான ப.ஞானபண்டிதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கௌரவிப்பு விழாவில 90 ஆவது அகவையைப் பூர்த்தி செய்தவர்களும், சமூக சேவை யாளர்களாகவும் இருந்து வருகின்ற நாகலிங்கம் மகாலிங்கம், முருகேசன் செல்லையா ஆகியோரும், கடந்த வருடம் இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் 'ஏ' சித்தி பெற்ற இதே இடத்தைச் சேர்ந்த மாணவர்களான விவேகானந்தன், யதுர்ஷன் ஆகியோரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (05)

## முன்பள்ளிகளின் கண்காட்சி

வல்வெட்டித்துறை கொத்தணி முன்பள்ளிகளின் கண்காட்சி இன்று காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொத்தணி முன்பள்ளியின் தலைவர் ஆ.மதியழகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் எம்.கனகலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன், சிதம்பராக் கல்லூரி அதிபர் கே.ராஜதுரை, கௌரவ விருந்தினராக வடமராட்சி வலய முன்பள்ளி இணைப்பாளர் திருமதி சுதா ஜினிதேவி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ முத்துமாரி அம் மன் ஆலயத் தேர்த்திருவிழா இன்று காலை இடம் பெறவுள்ளது.

காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 9.00 மணிக்கு தேர்த்திருவிழா இடம் பெறும்.

நாளை காலை தீர்த்தோற்சவத் திருவிழாவும், மாலை கொடியிறக்க நிகழ்வும் இடம் பெறும்.


## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

நல்லின ஜமுனாபாரி செவி ஆடுகள் மற்றும் T.Z.R ஜமகா, ஜப்பான் மோட்டார் சைக்கிள்கள், 2ஸ்ரீ மொறிஸ் மைனர் கார் மற்றும் ஜப்பான் சிறுவர்களுக்கான துவிச்சக்கர வண்டி என்பன விற்பனைக்குண்டு தொடர்புக்கு : 0771785179 R/261

# அனர்த்தங்களில் பாதிக்கப்படுவோரை கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியம்

## சுகுணதாஸ் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தற்போது வழமையாகவே மாணவர்கள் அனர்த்தங்களில் பாதிக்கப்படுவது அதிகமென்பதால் அவர்கள் குறித்து அதிக கவனம் எடுக்கப்படுவது தேவையானதாகும் என கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் க.சுகுணதாஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சி விவேகானந்த நகர் வித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களுக்கு அனர்த்தங்களை எதிர்கொள்வது தொடர்பான முழுநாள் செயலமர்வு வேள்ட் விஷன் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

மாணவர்களை அனர்த்தங்களிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் வேள்ட் விஷன் நிறுவனத்தினால் அளிக்கப்படும் நிதியின் மூலமாக பாடசாலை மாணவர்களுக்கு அனர்த்த பாதுகாப்பு வேலைத் திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வழமையாகவே மாணவர்கள் அனர்த்தங்களில் பாதிக்கப்படுவது அதிகமென்பதால் அவர்கள் குறித்து அதிக கவனம் எடுக்கப்பட வேண்டியுள்ளது.

அந்தவகையில் மாணவர்களின் உயரிய நலன்களைப் பேணுவதில் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்கள் அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனின் வழிகாட்டலில் சிறுவர்களின் நலன்களைப் பேணும் நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

விவேகானந்த நகர் வித்தியாலய அதிபர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலர் இராஜரட்ணம் செந்தூரன், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உளவள அலுவலர் தேவராஜா துஷ்யந்தன், ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

# சமுர்த்தி உதவித்திட்டத்துக்குள் வறிய மக்கள் உள்வாங்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)

வறிய மக்களை சமுர்த்தி உதவித்திட்டங்களுக்குள் உள் வாங்கி அவர்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டு திட்டங்களை வழங்க வேண்டும் என கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சந்திரசேகரம் தெரிவித்துள்ளார்.

உடுப்பிட்டி சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபையின் ஆண்டுப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் உடுப்பிட்டி பெண்கள் உயர்தரப்பாடசாலையில் திருமதி.வி.தேவமலர்ச்செல்வி தலைமையில் நடைபெற்றது இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமுர்த்தி அதிகார சபை 20 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்துள்ளது. இன்றைக்கு தன் பரிமாண வளர்ச்சி மூலம் சமுர்த்தி பயனாளிகளை உள்வாங்கி பயன் பெறும் விதத்தில் திணைக்களமாக மாற்றம் பெற்று பல்வேறுபட்ட மக்களுக்கு உதவிகளையும் செய்துவருகின்றது.

வறிய மக்களுடைய தேவைகள் சமுர்த்தி அதிகார சபைகள் ஊடாகவும் இப்போது 'திவிநெகும' சட்ட மூலத்தை அடிப்படையாகக் கொண்டு சமுர்த்தி திணைக்களமாக இயங்கி பல்வேறுபட்ட உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இவ்வாறு சமுர்த்தி பயனாளிகளை ஊக்கிவிக்கும் பொருட்டு கால் நடைவளர்ப்பு, வீட்டுத் தோட்டம் போன்ற பல தரப்பட்ட சிறுதொழில் துறைகளையும் வழங்கி வருவதுடன் சிறிய கடன் தொகையினையும் வழங்கி வருகின்றது. இதேவேளை வறிய மக்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் பிள்ளைகளுக்கு மாதாந்தம் ஒரு தொகைபணத்தையும் வழங்கி வருகின்றது.

எனவே வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் ஏனையவர்கள் போல வாழவேண்டும் அந்த நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு அவர்களுடைய வாழ்வை செம்மையாக்கி வருகின்றது என்றார். (116)

## பாலசுப்பிரமணிய ஆலயத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீபாலசுப்பிரமணிய ஆலயத்தின் திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதி திருக்கல்யாண உற்சவமும் மறுநாள் வைரவர் மடையும் இடம்பெறவுள்ளது.




காரைநகரில் புகைத்தலால் ஏற்படும் தீமை தொடர்பாக விழிப்புணர்வு பேரணியொன்று பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையில் நடைபெற்றது. நேற்றுமுன்தினம் இப்பேரணி காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியிலிருந்து காரைநகர் பிரதேச செயலகம் வரை நடைபெற்றது. இதில் ஈ.பி.டி.பி யின் காரைநகர் பிரதேச இணைப்பாளரும், காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான வீ.கண்ணன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மகிந்தவைக் கவிழ்ப்பது யார்? (02)



ரணில் விக்கிரமசிங்க என்ட ஒரு அரசியல் தலைவர் இருக்கிறார் அல்லவா! ஐயா "கோல்" போடத்தெரியாத ஒரு வீரர்.

ஐ.தே.க யின் தலைவராக இருந்தாலும் அவர் உண்மையான தலைவர் அல்ல.

ஐ.தே.க யின் வரலாற்றில் ஒரு அரைகுறைத் தலைவர் என்றால் அது ரணில்தான்.

கட்சியில் உள்ள அரைவாசிப்பேர் ரணிலை ஏற்றுக்கொள்ளவில்லை. கட்சியை சரியாக கட்டியாழத் தெரியாமல் இருப்பதால்தான் அவர் ஆட்சியைப் பிடிக்க முடியாமல் கோட்டை விட்டுக்கொண்டிருக்கின்றார் என்று குற்றம் சாட்டுகிறார்கள் பலர்.

ஆட்சியைப் பிடிப்பதற்காக யார் யாருடையதோ காலையெல்லாம் பிடித்தார் ரணில்.

இந்தியாவின் காலை, அமெரிக்காவின் காலை, கருணாவின் காலை, ஹக்கீமின் காலை சம்பந்தனின் காலை, சரத்பொன்சேகாவின் காலை என்று ரணில் பிடிக்காத கால்களில்லை.

ஆனால், அவரால் ஒரு அடி கூட முன்னேற முடியவில்லை.

இலங்கையின் ஜனாதிபதியாக வரவேண்டுமென்று கனவு கண்ட ரணில் இப்பொழுது கட்சித் தலைவராக இருப்பதே போதுமென்ற நிலை. ஆனாலும், ஆசை அவரை விட்டுப் போகவில்லை.

ஆட்சியிலிருக்கும் மகிந்த ராஜபக்ஷவைக் கவிழ்த்து விட்டால் அந்தக் கதிரையில் தான் ஏறி அமர்ந்து விடலாம் என்று எண்ணுகிறார் ரணில்.

ஆனால், தான் நினைத்த மாத்திரத்தில் மகிந்த ராஜபக்ஷவை தன்னுடைய வாழ்நாளில் இலகுவாகத் தோற்கடிக்க முடியாது என்றும் ரணிலுக்கு நன்றாகத் தெரியும். என்றபடியால்தான் அவர் எப்படியாவது, யாருடைய காலைப்பிடித்தாவது மகிந்தவைக் கவிழ்த்துவிட ஆசைப்படுகிறார்.

உள்ளூரில் மக்களைத் திரட்டி கட்சியைப் பலப்படுத்தி, ஆதரவுச் சக்திகளை ஒன்றுபடுத்தி ஒரு போராட்டத்தை நடாத்தவோ, ஆட்சியை மாற்றவோ ரணிலால் முடியவே முடியாது.

ஆகவேதான் அவர் இந்த மாதிரி ஆட்களை வைத்து தன்னுடைய காரியத்தைப் பார்க்க முயற்சிக்கிறார். ஆனால், ரணில் நினைப்பதைப்போல மகிந்தவைக் கவிழ்ப்பது ஒன்றும் சுகமான காரியமல்ல.

மகிந்தவைப் பொறுத்தவரை புலியான புலியையே அடக்கி, பிரபாகரனைக் களத்தை விட்டு அகற்றி, இந்தியாவையும் அமெரிக்காவையும் ஓரத்தில் நிறுத்தி, சீனாவை உள்ளே இருத்தி, ஒரு மாயாஜால விளையாட்டுக் காட்டிக்கொண்டிருக்கும் ஆள்.

இப்படியான ஒரு ஆளை என்ன செய்வது என்று இரவு பகலாக ரணில் யோசித்து யோசித்து, அவருடைய தலையே பழுதாகி விட்டது.

ரணில் நினைப்பதைப் போல மகிந்தவைக் கவிழ்க்க வேண்டுமென்றால், முதலில் ஐ.தே.க. வை உயிரூட்ட வேண்டும். ஏனைய கட்சிகளையும் தலைவர்களையும் வளைத்துப் பிடிக்க வேண்டும். அப்படிப் பிடித்த சரத்பொன்சேகா என்ற குதிரை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஓடமுடியாமல் படுத்து விட்டது.

இப்பொழுது மறுபடியும் இன்னொரு விசப்பரீட்சையா?

அப்படித்தான் விசப்பரீட்சையில் இறங்கினாலும் ஐ.தே.க. வை உயிரூட்டுவதற்கு ரணிலினாலும் முடியாது. சஜித்தினாலும் முடியாது. ஐ.தே.க. வில் இப்போதுள்ள வேறு எந்தத் தலைவராலும் முடியாது.

ஏனைய தலைவர்களும் கட்சிகளும் நம்பிக்கை அளிக்கும் நிலையில் இல்லை.

அப்படியென்றால் என்ன செய்வது?

அமெரிக்காவையோ, இந்தியாவையோ, பிரித்தானியாவையோ எதிர்பார்க்க வேண்டியதுதான்.

'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவர்கள் எல்லாம் வானம் ஏறி வைகுண்டம் போக எண்ணினால்' இப்படித்தான்.

'குளம் வற்றும்வரை காத்திருந்து வாடிச் செத்த கொக்கைப் போல' ரணிலும் காத்துக் கொண்டேயிருக்க வேண்டியதுதான்.

அட, அப்படியென்றால் மகிந்தவைக் கவிழ்ப்பது யார்? அதைச் செய்வது எப்படி?

பொறுங்கள், இன்னும் கனபேர் இருக்கிறார்கள். வரும் நாட்களில் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களையும் பார்த்துவிட்டு யோசிக்கலாம்.

பணம் வரும்போது இரண்டு கால்களுடன் வரும்.
போகும்போது பல கால்களுடன் போகும்.

- பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## போரும் விளையாட்டும்!

விளையாட்டு வினையாய் முடிந்தது; விளையாட்டு விபரீதமானது என்றெல்லாம் தமிழில் மரபாகப் புழங்கிவரும் சொற்றொடர்கள் உண்டு. அதாவது மனதுக்கு மகிழ்ச்சி தரும் அதேசமயத்தில் நமது உடலுக்கு உறுதி தரும் உடற்பயிற்சியாகவும் அமையும் விளையாட்டை, அதன் ப்யன்களைக் கருதாது, அதற்கு அப்பால் விலகி வெற்றி தோல்வி பற்றிய ஆவேசத்தைக் கொள்ளும் போது அது விபரீதத்தில் முடிகிறது.

நேற்று நிகழ்ந்தேறிய விளையாட்டு தொடர்பான மூன்று செய்திகள், பொதுவாக விளையாட்டு தரவேண்டிய சந்தோஷத்திற்குப் பதிலாக எல்லோர் மனதிலும் கவலையை ஏற்படுத்துவனவாக அமைந்துவிட்டன.

வடக்கின் பெரும்போர் என அழைக்கப்பட்ட, யாழ்ப்பாணத்தின் இரு பிரபல கல்லூரிகளுக்கு இடையிலான கிறிக்கெற் போட்டி, நடுவரின் தீர்ப்பு விளைவித்த குழப்பத்தால், பெரும் தகராறாகி போட்டி இடைநடுவிலேயே கைவிடப்பட வேண்டியதாகிவிட்டது.

அதுபோல, தெற்கின் பெரும் போராக வர்ணிக்கப்படும், கொழும்பின் இரு பிரபல கல்லூரிகளுக்கு இடையிலான அந்த கிறிக்கெற் பெரும்போட்டியும், இடையிலே குழப்பமும் மோதலுமாகி முடிவுவரை விளையாட முடியாமல் கைவிடப்பட்டிருக்கிறது.

இதையெல்லாம் விடப் பெரிய கொடுமையாக, யாழ்ப்பாணத்தில் பிரபலமான இரு கல்லூரிகளுக்கு இடையில் நடைபெற்ற மற்றொரு கிறிக்கெற் போட்டியில், பார்வையாளர்களாக இருந்த இரண்டு கல்லூரிகளினதும் ஆதரவாளர்களுக்கு இடையே இடம்பெற்ற மோதலில் ஒருவர் கொல்லப்படும் அளவுக்கு நிலைமை விபரீதமாகியுள்ளது.

விளையாட்டிலும் கூட வெற்றி தோல்வியை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாத நமது மனநிலையையே இவை காட்டுகின்றன. போரை விளையாட்டாகவும் விளையாட்டை போராகவும் எடுத்துக்கொள்ளும் இந்த நமது மன விசித்திரங்களும் கூட ஆராயப்பட வேண்டியன.

நமது சுயபாதுகாப்பு கருதியும் நாகரிகம் கருதியும் நமக்குள் உறங்குநிலையில் நாம் வைத்திருக்கும் இந்த வன்முறையுணர்வு, எப்போது நம் தடைகளை உடைத்துக்கொண்டு மேலெழும்பி வருகிறது?

தோல்வியுணர்வின் போதா அல்லது மாறி மாறிச் சீண்டப்படுதல் வளர்ந்து பெரிதாகும் போதா அல்லது குழு மனோநிலையில் உருவாகும் ஆவேசத்திலிருந்தா உயிரையும் துச்சமென மதிக்கும் இந்த வன்முறையுணர்வு பீறிட்டுக் கிளம்புகிறது!

கும்பல் மனோநிலையில் உருவாகும் வன்முறையுணர்வைச் சுட்டுவதாக ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் ஒரு காட்சி உண்டு. சீஸரின் கொலைக்குக் காரணமான சின்னா என்ற துரோகியைப் பழிவாங்க வேண்டுமென ஒரு கும்பல் துரத்துகிறது.

வழியில் சின்னா என்ற ஒருவன் அகப்படுகிறான். அவனைக் கொல்லவென கூட்டம் துரத்துகிறது. அவன், "ஐயோ நான் அந்த சின்னா இல்லை; கவிஞன் சின்னா" என்று பரிதாபமாக கத்துகிறான். "பரவாயில்லை அவன் கவிதைகளுக்காக அவனைக் கொல்லுங்கள்" என்று துவம்சம் செய்து முன்னேறுகிறது கும்பல்.

இந்த கும்பல் ஆவேச உணர்ச்சிதான் நமக்குள் தூண்டிவிடப்படுகிறதா? விளையாட்டிற்காகவும் கொல்லும் அளவிற்கு ஆவேசம் கொள்ளவே இந்த சமூகம் நம்மைப் பழக்கப்படுத்துகிறதா?

நமது சமூகப் பெரியவர்கள், கல்வியாசான்கள், மதகுருமார்கள், எழுத்தாளர்கள், ஊடகப் பொறுப்பைக் கையில் கொண்டிருப்போர் இந்த வன்முறை ஆவேசங்களை இளையோர் மனதில் தணிக்கும் முறையிலேயே தங்கள் ஒவ்வொரு சொல்லும் செயலும் வெளியாவதை உறுதிப்படுத்த வேண்டும்.

நாம் பல்லாயிரம் வருசங்களாக நாகரிகமடைந்து வந்த மனிதர்கள். மீண்டும் குகைமனிதர் காலத்து வன்முறையுணர்வுகளுக்குத் திரும்புவதை ஊக்கப்படுத்தக் கூடாது.

-ஆசிரியர்

# சிறுவர் பாலியல் தொழிலின் கூடாரமா இலங்கை?

## ஐ.நா. அமைப்புக்கள் மறுத்துரைப்பு

(கொழும்பு)

சிறுவர் பாலியல் தொழிலாளர்களின் நாடாக இலங்கை மாறி இருப்பதாக கடந்த வாரம் வெளியாகி இருந்த செய்தியை, ஐக்கிய நாடுகளின் சிறுவர் பாதுகாப்பு சபையும், சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமும் நிராகரித்துள்ளன.

இணையத்தளத்தில் இவ்வாறான அறிக்கை ஒன்று கடந்த வாரம் வெளியிடப்பட்டிருந்தது.

இதில் இலங்கையில் 40 ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. யுனிசெப் மற்றும் உலகத் தொழிலாளர் ஸ்தாபனம் என்பவற்றை இந்த அறிக்கையில மேற்கோள்காட்டப்பட்டிருந்தது.

எனினும் குறித்த நிறுவனங்கள் இரண்டும் இந்த அறிக்கையை நிராகரித்துள்ளன.

இலங்கையில் உள்ள சிறார்கள் பாலியல் தொழிலில் ஈடுபகின்றமை தொடர்பில், கடந்த 10 வருடங்களாக ஆய்வுகள் எதனையும் நடத்தவில்லை என்று யுனிசெப் தெரிவித்துள்ளது.

2003ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட கணிப்பின் அடிப்படையில் இலங்கையின் தற்போதைய நிலைமையை ஒப்பு நோக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இலங்கையில் சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்காக, உள்நாட்டு அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவதாகவும், யுனிசெப் மற்றும் உலக தொழிலாளர் ஸ்தாபனம் என்பன தெரிவித்துள்ளன.

## தெற்கில் தேர்தல் வன்செயல்; கொழும்பு மாவட்டம் முன்னணியில்

(கொழும்பு)

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் கிடைத்துள்ள 77 முறைப்பாடுகள் தொடர்பில் 67 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிடுகின்றது.

தேர்தல் சட்டமீறல்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பிலேயே இந்த முறைபாடுகள் பதிவாகியிருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த முறைபாடுகள் தொடர்பில் 27 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவற்றுள் மூன்று வாகனங்கள் அரசாங்கத்திற்கு சொந்தமானவை என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து 718 சம்பவங்கள் இதுவரை பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிடுகின்றது.

இவற்றுள் கொழும்பு மாவட்டத்திலேயே ஆகக் கூடுதலான 208 முறைபாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் முறைப்பாட்டுப் பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## படைவீரர் வீடு மீது கைக்குண்டு வீச்சு

(கொழும்பு)

பிடிகல பொத்தல பகுதியில் வாழ்ந்துவருகின்ற ஓய்வு பெற்ற இராணுவச் சிப்பாயின் வீட்டின் மீது கைக்குண்டு வீசப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மேற்கொள்ளப்பட்ட இந்தக் கைக்குண்டு வீச்சில் ஓய்வுபெற்ற இராணுவ வீரருக்கோ அவரது மூன்று குழந்தைகளுக்கோ எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை என்று தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## பிக்கு மீது கத்திக்குத்து

(கொழும்பு)

எல்பிட்டிய சரணங்கர விகாரையின் விஹாராதிபதி வெத்தேவே பஞ்சகீர்த்தி தேரர் இனந்தெரியாதோரின் கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருவதுடன் சந்தேகநபரையும் தேடிவருவதாகத் தெரிவித்தனர். படுகாயமடைந்த தேரர், எல்பிட்டிய வைத்தியசாலையிலிருந்து காலி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## சுற்றுலாப்பயணிகள் வருகை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

பெப்ரவரி மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்திருந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 24.5 வீதத்தால் அதிகரித்திருந்தது.

மொத்தமாக 141,878 பேர் கடந்த மாதம் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளாக வருகை தந்திருந்தனர் என சுற்றுலா ஊக்குவிப்பு அலுவலகம் அறிவித்துள்ளது.

ஆண்டின் முதல் இரு மாதங்களில் வருகை தந்தவர்களின் எண்ணிக்கை 28.5 வீதத்தால் அதிகரித்து 288,453 ஆக பதிவாகியிருந்தது.

தெற்காசியாவிலிருந்து வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 22.9 வீதம் அதிகரித்துக் காணப்பட்டது. கிழக்கு ஆசியாவிலிருந்து வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 31.2 வீதத்தால் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போகம்பறை சிறைச்சாலை இப்போது மக்கள் பார்வைக்கு

(கொழும்பு)

கைதிகளின்றி வெற்றிடமாகியுள்ள போகம் பறை சிறைச்சாலை நேற்று முதல் மக்கள் பார்வைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி வரை மக்கள் பார்வைக்காக போகம் பறை சிறைச்சாலை திறந்து வைக்கப்படும் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும், சிறைச்சாலைகள் ஆணையாளருமான காமினி குலதுங்க தெரிவித்துள்ளார்.

நாள்தோறும் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 4.30 வரையான காலப்பகுதிக்குள், மக்கள் சிறைச்சாலையை பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சிறுவர் பாதுகாப்புக்கு முன்னுரிமை; அதிபர்களுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

சிறுவர்களது பாதுகாப்பு தொடர்பில் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கும் விசேட செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி பிரதான செயற்திட்டத்தில் அநுராதபுர மாவட்ட பாடசாலை அதிபர்கள் உள்வாங்கப்படவுள்ளதாக தேசிய சிறுவர் அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்காக அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த 200 பாடசாலை அதிகாரிகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மனித உரிமைகள் பேரவையின் மாநாட்டில் ஐரோப்பிய நாடுகளின் அனுசரணையுடன் அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணையின் இறுதி வடிவம் இன்னும் வெளியாகவில்லை. அண்மையில் சுற்றுக்கு விடப்பட்ட நகல் பிரேரணையிலிருந்து அது பெருமளவில் வேறுபட்டதாக இருக்காது எனக் கூறலாம்.

அமெரிக்காவின் நகல் பிரேரணை ஏமாற்றம் அளிப்பதாகக் கூட்டமைப்புத் தலைவர்கள் கூறுகின்றார்கள். போர்க் குற்றம் தொடர்பான சர்வதேச விசாரணை அமெரிக்கப் பிரேரணையில் இடம் பெறாததே இவர்களின் ஏமாற்றத்துக்கான பிரதான காரணம். சர்வதேச விசாரணையைத் தவிர்க்க முடியாது என்றும், இலங்கை அரசாங்கம் இந்தத் தடவை வசமாக மாட்டிக் கொண்டிருக்கின்றது என்றும் கடைசி நிமிடத்தில் கூடத் தமிழ் மக்களிடம் நம்பிக்கை வளர்த்தவர்கள் ஏமாற்றம் பற்றி பேசாமல் இருக்க முடியாது.



# தமிழ் மக்களை ஏமாற்றியது போதுமடா சாமி

**சங்கர சிவன்**

**அமெரிக்காவின் தீர்மானம் இப்படித்தான் இருக்கும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியும். தெரிந்திருந்தும் கடைசி வரை போலியான நம்பிக்கைகளை வளர்த்துத் தமிழ் மக்களை ஏமாற்றியிருக்கின்றார்கள். இதுதான் இவர்களின் அரசியல். உண்மையாகவே ஏமாற்றம் அடைந்துவிட்டார்கள் என்று வைத்துக்கொண்டாலும் மூன்று தடவைகள் அடுத்தடுத்து அடைந்த ஏமாற்றத்திலிருந்து பாடம் கற்றுக்கொள்ளவில்லை. போகின்ற போக்கைப் பார்த்தால் சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக ஏமாற்றுவதையே இத்தலைவர்கள் விரும்புவது போல் தெரிகின்றது.**

சர்வதேச விசாரணை அமெரிக்கப் பிரேரணையில் இருக்காது என்ற தகவல் பெப்ரவரி நடுப்பகுதியில் கசியத் தொடங்கியது. இது தங்களுக்குத் தெரியாது என்று தமிழ்த் தலைவர்கள் றீல் விடக்கூடாது. சர்வதேச விசாரணை அவ்வளவு சுலபமான காரியமல்ல என்பதையும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் சீனாவும், ரஷ்யாவும் வீட்டோ அதிகாரத்தைப் பிரயோகித்து அந்த முயற்சியை முறியடிக்கலாம் என்பதையும் அறிந்திருக்கும் அளவுக்கு இவர்களிடம் உலக அரசியல் பற்றிய புரிகை இல்லையா?

அமெரிக்காவின் தீர்மானம் இப்படித் தான் இருக்கும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியும். தெரிந்திருந்தும் கடைசி வரை போலியான நம்பிக்கைகளை வளர்த்துத் தமிழ் மக்களை ஏமாற்றியிருக்கின்றார்கள். இதுதான் இவர்களின் அரசியல்.

உண்மையாகவே ஏமாற்றம் அடைந்து விட்டார்கள் என்று வைத்துக்கொண்டாலும் மூன்று தடவைகள் அடுத்தடுத்து அடைந்த ஏமாற்றத்திலிருந்து பாடம் கற்றுக்கொள்ளவில்லை. போகின்ற போக்கைப் பார்த்தால் சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக ஏமாற்றுவதையே இத்தலைவர்கள் விரும்புவது போல் தெரிகின்றது.

இப்போது கடைசி நேர முயற்சியாக ஜெனிவாவுக்குச் சிலர் பயணமாகின்றார்கள். வேறு சில தலைவர்கள் கொழும்பிலுள்ள அமெரிக்க மற்றும் பிரித்தானியத் தூதரகங்களுக்குப் படையெடுக்கின்றார்கள். அமெரிக்கப் பிரேரணையின் இறுதி வடிவத்தில் சர்வதேச விசாரணையை உள்ளடக்குவதற்காகவே இந்தக் கடைசி நேர முயற்சி. கூட்டமைப்புத் தலைவர்கள் சர்வதேச விசாரணையில் இவ்வளவு அக்கறை செலுத்துவதற்கான காரணத்தைத் தமிழ் மக்கள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் அடிப்படையானதும் பிரதானமானதாகத் தீர்வு காண வேண்டியதுமான பிரச்சினையாக இனப்பிரச்சினை விளங்குகின்றது. போர்க் குற்றம் தொடர்பான சர்வதேச விசாரணை இனப்பிரச்சினையின் தீர்வுக்கு எந்தவிதத்திலும் உதவப் போவதில்லை. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் அரசாங்கத்துக்கும் தண்டனை பெற்றுக் கொடுப்பதுதான் சர்வதேச விசாரணையின் விளைவாக இருக்கும். இதற்கும் இனப்பிரச்சினையின் தீர்வுக்கும் ஒரு தொடர்பும் இல்லை. அப்படியிருந்தும் தமிழ்த் தலைவர்கள் சர்வதேச விசாரணையில் கூடுதல் அக்கறை செலுத்துவதற்குக் காரணம் இல்லாமலில்லை.

சர்வதேச விசாரணைக் கோரிக்கைக்கு அரசாங்கத்தினதும், சிங்கள மக்களினதும் பிரதிபலிப்பு இனப்பிரச்சினையின் தீர்வைப் பொறுத்த வரையில் ஆரோக்கியமானதாக இருக்காது. ஜனாதிபதியினதும், அரசாங்கத் தரப்பினரதும் அண்மைக்கால உரைகள் இதைக் கோடி காட்டுகின்றன. புலிகளைத் தோற்கடித்துச் சிங்கள மக்களுக்கு அமைதியான வாழ்க்கையைத் தேடித் தந்த ஜனாதிபதியையும் படையினரையும் தண்டனைக்கு உட்படுத்தும் முயற்சி என்ற பிரசாரம் சிங்கள மக்களிடம் அரச ஆதரவு நிலைப்பாட்டை வளர்க்கின்றது. இந்த வளர்ச்சிப் போக்கு இனப்பிரச்சினையின் தீர்வைச் சிக்கலாக்குவதாகவே அமையும். அது தான் தமிழ்த் தலைவர்களின் எதிர்பார்ப்பு.

இனப்பிரச்சினையின் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாவதைத் தமிழ்த் தலைவர்கள் விரும்புவதில்லை.

**சர்வதேச விசாரணையை எவ்வளவுக்கு வலியுறுத்துகின்றார்களோ அவ்வளவுக்கு இனப்பிரச்சினையின் தீர்வுக்குச் சாதகமற்ற சூழ்நிலை வளரும் என்பது தமிழ்த் தலைவர்களுக்கு விளங்கும். அதனால்தான் இனப்பிரச்சினைக்கு எவ்வித தீர்வையும் கொண்டிராத சர்வதேச விசாரணையை இவர்கள் வலியுறுத்துகின்றார்கள். தங்கள் அரசியல் இருப்புக்காக இனப்பிரச்சினையின் தீர்வைச் சிக்கலாக்கித் தமிழ் மக்கள் அனை-வரையும் துயரத்தில் தள்ளும் இந்தச் சுயநல அரசியலைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.**

இனப்பிரச்சினை தீராதிருக்கும் வரை அதை மூலதனமாக்கி அரசியல் நடத்தலாம் என்பது அவர்கள் போடும் கணக்கு. எந்தக் காலத்திலும் தமிழ் மக்களின் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளிலோ பிரதேச அபிவிருத்தியிலோ தமிழ்த் தலைவர்கள் அக்கறை செலுத்தியதில்லை. இனப் பிரச்சினையின் தீர்விலும் அக்கறை செலுத்தியதில்லை. இனப்பிரச்சினை தீராதிருப்பதன் விளைவாகத் தலைதூக்கும் அன்றாடப் பிரச்சினைகளை மையப்படுத்தி அடிக்கடி ஆர்ப்பாட்டங்களும் சத்தியாக்கிரகங்களும் செய்து தங்கள் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வார்களேயொழிய பிரச்சினையின் தீர்வுக்காக உருப்படியான நடவடிக்கை எதையும் மேற்கொள்வதில்லை.

தமிழ் மக்களின் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளில் தலையிடும்போது ஆதிக்க வர்க்கத்தைப் பகைக்க நேரிடும் என்பதால் அப்பிரச்சினைகளை இவர்கள் தொட்டும் பார்ப்பதில்லை. இவர்களின் இந்தச் சிந்தனை இனப்பிரச்சினையின் தீர்வுக்கு எப்போதும் தடையாகவே இருந்து வந்திருக்கின்றது. முன்னைய தலைவர்கள் தீர்வொன்றை முன் வைத்துச் செயற்படுவதும் அதை நோக்கி நகர்வதற்கான சந்தரப்பம் கிடைக்கும்போது ஏதாவது சொல்லி அதைக் கைவிடுவதாகவும் இருந்தார்கள். இன்றைய தலைவர்கள் ஒரு படி மேலே போய் எந்தத் தீர்வையும் முன்வைக்காமல் சர்வதேச சமூகத்திடம் பொறுப்பைக் கையளித்துவிட்டுப் பேசாமல் இருக்கின்றார்கள்.

சர்வதேச விசாரணையை எவ்வளவுக்கு வலியுறுத்துகின்றார்களோ அவ்வளவுக்கு இன்பபிரச்சினையின் தீர்வுக்குச் சாதகமற்ற சூழ்நிலை வளரும் என்பது தமிழ்த் தலைவர்களுக்கு விளங்கும். அதனால்தான் இனப்பிரச்சினைக்கு எவ்வித தீர்வையும் கொண்டிராத சர்வதேச விசாரணையை இவர்கள் வலியுறுத்து கின்றார்கள். இனப்பிரச்சினை தீராம லிருப்பதால் உருவாகும் நிலைமையை ஊதிப் பெருப்பித்து எப்போதும் வாக்குகளை அள்ளிக் குவிக்கலாம். நாடாளுமன்ற ஆசனங்களைப் பத்திரமாகப் பாதுகாக்கலாம். தங்கள் அரசியல் இருப்புக்காக இன்ப் பிரச்சினையின் தீர்வைச் சிக்கலாக்கித் தமிழ் மக்கள் அனைவரையும் துயரத்தில் தள்ளும் இந்தச் சுயநல அரசியலைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். சுயநல அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதிலேயே தமிழ் மக்களின் விமோசனம் தங்கியுள்ளது.

கூட்டமைப்புத் தலைமை இனப்பிரச்சினை தொடர்வதை எதற்காக விரும்புகின்றது என்ற கேள்வி எழலாம். முதலாவதாக, இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பாக கூட்டமைப்புக்குள் ஒன்றுபட்ட நிலைப்பாடு இல்லை. புலிகளின் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலை இன்னும் கைவிடாதிருக்கும் ஸ்ரீதரன், மாவை போன்றவர்கள் அரசியல் தீர்வை விரும்பவில்லை. அரசியல் தீர்வை விரும்புபவர்களுக்கும் இவர்களுக்குமிடையே உட்கட்சி மோதல் இடம்பெறுவதைத் தவிர்ப்பதனால் ஒரு பாதிப்பும் இல்லை என்று தலைவர்கள் கருதுகின்றார்க்ள. அதாவது இனப் பிரச்சினை தீர்வு இல்லாமல் பிரச்சினையாகவே இருப்பது எல்லாத் தரப்பினரதும் அரசியல் பதவிகளுக்கு உத்தரவாதம் என்பதால் பிரச்சினை தொடரட்டும் என்பது தலைமையின் முடிவு.

மற்றைய காரணம் பிரதானமானது. கூட்டமைப்புத் தலைமை புலிகளின் செயலாணையை ஏற்றுச் செயற்பட்ட காலத்தில் புலி சார்புப் புலம்பெயர் அமைப்புகளுடன் இவர்களுக்கு நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது. இப்போதும் அத்தொடர்பு தொடர்கின்றது. கூட்டமைப்பினுடைய நிதி வளத்தின் பெரும் பகுதி புலம்பெயர் அமைப்புகளிடமிருந்து கிடைப்பதாகவும். மேலும் கூட்டமைப்புத் தலைவர்களின் வெளிநாட்டுப் பிரயாணங்களுக்கும் புலிசார்புப் புலம்பெயர் அமைப்புகளே நிதி ஏற்பாடுகளைச் செய்கின்றன. அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகுவதை அனுமதிக்கக் கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே புலிசார்புப் புலம்பெயர் அமைப்புகள் இந்த உதவிகளைச் செய்கின்றன. இந்த நிபந்தனையைக் கூட்டமைப்புத் தலைமை இறுக்கமாகப் பின்பற்றுகின்றது.

இந்த நிலையிலிருந்து விடுபட்டு இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்காகச் செயற்பட முன்வருமாறு கூட்டமைப்புத் தலைமையிடம் கோரிக்கை விடுப்பதால் எவ்வித பலனும் ஏற்படப்போவதில்லை. புலம் பெயர் அமைப்புகளிடமிருந்து கிடைக்கும் வசதி வாய்ப்புகளை இழக்க அவர்கள் தயாராக இல்லை. தமிழ் மக்களை ஏமாற்றுவதை இவர்கள் கைவிட மாட்டார்கள். தமிழ் மக்கள் தான் தாங்கள் ஏமாறுவதை நிறுத்த வேண்டும்.

# கொலைக் குற்றவாளிக்கு மரண தண்டனை

(கொழும்பு)

கொலை வழக்கொன்றில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட நபர் ஒருவருக்கு அநுராதபுரம் உயர் நீதிமன்றம் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

2003ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் திகதி அல்லது அதனை அண்டிய காலப்பகுதியில் கிரவஸ்திபுர பிரதேசத்தில் நபர் ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்நபர மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு மீதான ஆரம்பகட்ட விசாரணைகள் அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் இடம் பெற்ற நிலையில் மேலதிக வழக்கு விசாரணை அநுராதபுரம் உயர் நீதிமன்றில் இடம் பெற்றது.



இதன்போது குற்றவாளி இனங்காணப்பட்ட நிலையில் அவருக்கு அநுராதபுரம் உயர் நீதிமன்ற நீதிபதி சினந்த குமார இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார். அநுராதபுரம் கிரவஸ்திபுர பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதான நவரத்கபண்டா என்பவருக்கே மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையின் கள யதார்த்தம் முஸ்லிம் நாடுகளுக்கு நன்கு தெரியும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச ரீதியாக தோன்றியுள்ள பிரச்சினைகள் தொடர்பில் உண்மைநிலையை நன்கறிந்துள்ள அனைத்து முஸ்லிம் நாடுகளும் இலங்கைக்காக ஒருமித்து குரல் எழுப்பவுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்காலிக நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காக உண்மைக்குப் புறம்பான பிரசாரங்களின் மூலம், நீதிக்காகவும், உண்மைநிலையின் பொருட்டும் இந்த நாடுகள் குரல் எழுப்புவதை சீர்குலைக்கும் முயற்சியில் ஒருசிலர் ஈடுபட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிடுகின்றார்.

காலி பகுதியில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களை நேற்று முன்தினம் சந்தித்தபோதே ஜனாதிபதி இந்த கருத்துக்களைக் கூறினார்.

முஸ்லிம் மக்களுடன் ஆரம்பம் முதலே தாம் நட்புறவுடன் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதன்போது சுட்டிக் காட்டினார்.



அத்துடன் நிகழ்காலத்தில் இருக்கின்ற அனைத்து தலைவர்களுக்கும் முன்பிருந்தே பலஸ்தீனத்தின் முன்னாள் தலைவர் யாசீர் அரபாத்தை தாம் அறிந்திருந்ததாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார்.

# வறட்சியான காலநிலை இந்த வாரம் அகலும்




(கொழும்பு)

நாட்டில் நிலவி வந்த கடும் வறட்சியான சூழ்நிலை இந்த வாரம் முதல் மாற்றங்கள் வரும் என்று கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை நிலவி வந்த காலநிலையில் திடீர் மாற்றம் ஏற்படும் என்று தெரிவிக்கப் படுகிறது.

கடந்த வாரங்களில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வறட்சியான காலநிலை காணப் பட்டது.

இந்த நிலையில் குடிநீருக்கான தட்டுப்பாடும் ஏற்பட்டது.எனினும் இந்த வாரம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்யும் என்று காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

# ஜெனிவாவில் அரச தரப்புக்கு பலம் சேர்க்க களம் குதிக்கிறது மற்றுமொரு அணி

## பழுத்த இராஜதந்திரி தலைமையில்

(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தலைமையிலான உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் 25ஆவது கூட்டத்தொடரில் பங்கு பற்றுவதற்காக எதிர்வரும் 23ஆம் திகதி ஜெனிவா புறப்படவுள்ளதாக அரச தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

இக்குழு, மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் அங்கத்துவம் வகிக்கும் ஏனைய உறுப்புரிமை நாடுகளின் இராஜதந்திரி களுக்கு இலங்கையின் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்து விளக்கமளிப்பர். ஜெனிவாவில் நடைபெறுகின்ற ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அமெரிக்காவினால்



சமர்பிக்கப்பட்ட உத்தேச வரைபின் கேள்வி நேரம் இம்மாதம் 20ஆம் திகதியின் பின்னர் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்போது வெளிநாட்டு இராஜதந்திரிகளால் எழுப்பப்படும் கேள்விகளுக்கு இலங்கையிலிருந்து செல்லும் இக்குழு உரிய விளக்கங்களை அளிப்பதன் மூலம் அரசாங்கத்துக்கு வலு சேர்க்கவுள்ளது.வெளிவிவகார அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அதிகாரிகளே இந்த உயர்மட்ட குழுவில் அங்கம் வகிக்கவிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்ட அறிக்கைக்கான பதிலளிக்கையினை வெளிவிவ கார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் ஜெனிவாவில் கடந்த 5ஆம் திகதி தனது உரையின் போதும் 6ஆம் திகதி நவிபிள்ளையுடனான தனிப்பட்ட சந்திப்பின் போதும் முன்வைத்திருந்தார். இது குறித்த வாதப்பிரதிவாதங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அருமை லிங்கம் மரணம்

மட்டக்களப்பில் அமெரிக்காவுக்கு எதிராகவும் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்தும் அடையாள உண்ணாவிரத போராட்டத்தில் பங்குகொண்ட முன்னாள் மாகாணசபை உறுப்பினர் அருமைலிங்கம் திடீர் சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இவர் முன்னாள் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினராக இருந்துவருவதுடன் மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு காந்திபூங்காவுக்கு அருகில் முன்னாள் மட்டக்களப்பு மாநகர முதல்வர் சிவகீதா பிரபாகரன் தலைமையில் இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தப்பட்டது. காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.00 மணி வரை இந்த போராட்டம் நடாத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து வீட்டுக்குச் சென்றுவிட்டு உரையாடிக் கொண்டிருந்தபோது திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலி காரணமாக அருமைலிங்கம் வீட்டிலேயே உயிரிழந்துள்ளார்.

# சமரசிங்க-பீரிஸ் முரண்பாடு ஜெனிவாவில் எதிரொலிக்கிறது

## சாடுகிறார் ஐ.தே. கட்சி எம்.பி.



(கொழும்பு)

ஜெனிவாவுக்குச் சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிசும், அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் ஒருவருடன் மற்றவர் பேசிக் கொள்ளாத நிலையில், அவர்களால் எப்படி நாட்டைப் பாதுகாக்க முடியும் என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல. அமைச்சர் பீரிஸ் ஜெனிவா சென்று பொய்யுரைத்துள்ளார். வெலிவேரிய சம்பவம் குறித்த கேள்விக்கு அவர், வெலிவேரிய பிரதேசத்தில் குடிநீர் தொடர்பான போராட்டம் ஒன்று நடைபெற்றது.

அதன் போது கலகம் ஏற்படுவதனை தடுக்க இராணுவத்தை அனுப்பி வைத்தோம். இராணுத் தின் தன்னியக்க துப்பாக்கிகளை சிலர் கைப்பற்ற முயற்சித்த போது ஏற்பட்ட மோதலில் சில பொதுமக்கள் உயிரிழந்தனர் என அமைச்சர் பீரிஸ் பதி லளித்துள்ளார்.

இந்தப் பதில் முற்று முழுதான ஓர் பொய்யாகும். இவ்வாறான பாரிய பொய்களையே ஜீஎல்பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்துடன் மோதிக்கொள்ளும் ஓர் அரசாங்கத்தை நாம் விரும்பவில்லை. அரசாங்கம் எல்லா விடயங்களிலும் தன்னிச்சையான போக்கைப் பின்பற்றி வருகின்றது. இதனை ஓர் ஆரோக்கியமான நிலைமையாகக் கருத முடியாது. அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாடுகளினால் இந்த நாடு பாதகங்களை எதிர்நோக்க நேரிடும் என லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்

# ஆங்கிலத்தில் பேச்சுப்பரீட்சை வருகிறது புதிய நடைமுறை

## அமைச்சரவை அனுமதி விரைவில்

(கொழும்பு)

அடுத்த வருடம் அமுலாகும் வகையில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் ஆங்கில மொழிப் பரீட்சையில் கேட்டல் மற்றும் பேசும் ஆற்றல்களுக்கு 20 புள்ளிகளை வழங்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன இதற்கான அனுமதியை அமைச்சரவையிடம் கோரியுள்ளார். அமைச்சரின் யோசனைப்படி அந்தப் பரீட்சை புறம்பான ஒன்றாக நடாத்தப்படும்.

இதேவேளை அடுத்த வருடம் முதல் உள்ளூரில் இயங்கும் சர்வதேச பாடசாலைகளில் சமயம், வரலாறு மற்றும் தாய்மொழி போன்ற பாடங்களை கட்டாயப்படுத்தும் யோசனையும் அமைச்சரினால் முன்வைக்கப் பட்டுள்ளது



வர்த்தகக் கண்காட்சி ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை புண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது இக் கண்காட்சியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இளைஞர் விவகார மற்றும் திறன் விருத்தி அமைச்சர் டலஸ் அளகப்பெரும ஆகியோர் கலந்துகொண்டனர். இக் கண்காட்சி இன்றும் நடைபெறும்.



கைதடி யா/எருதிடல் அ.த.க.பாடசாலையின் தமிழ்த் தின விழா அண்மையில் நடைபெற்றபோது விருந்தினர்கள் மங்கல விளக்கேற்றுவதையும், மாணவர்கள் விருந்தினர்களை வரவேற்பதையும், மாணவர்களின் கலை நிகழ்வையும் காணலாம். (51)

# தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்க இலகுகடன் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய முதலீட்டு வங்கி மற்றும் சிறிய நடுத்தர அளவு வியாபார நிலையம் என்பன இணைந்து கிரீன் எனேஜி திட்டத்தின் கீழ் வழங்கும் கடன்களை டி எவ் சீ சீ வங்கி டி எவ் சீ சீ வர்தன வங்கியூடாக பெற்றுக் கொள்ளமுடியும்.

தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் வகையில் அமைந்த இந்த கடன் திட்டத்திற்கு எட்டு வீத வட்டி அறவிடப்படும்.

ஆகக்குறைந்த கடன் தொகையாக பத்து இலட்சம் ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் கடன் உச்ச வரம்பு தொழிலை பொறுத்ததாக அமையும்.

ஆரம்பிக்கும் தொழிலின் தன்மை, சந்தைப்படுத்தல், கால எல்லை என்பவற்றின் அடிப்படையில் சலுகைக்காலம், கடன் மீளச்செலுத்தும் தவணைக் காலம் என்பன கணிக்கப்படும். பத்து வருடங்கள்வரை தவணைக் காலம் வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கு குறிப்பிட்ட தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாலும் அதிக தொகை வழங்குவதாலும் கடன் தொகை விரைவில் தீர்ந்து விடும் எனவே கடன்பெற விரும்புபவர்கள் உடனே விண்ணப்பிக்கும் பட்சத்தில் முன் உரிமை அடிப்படையில் கடன் வழங்கப்படும்.

உற்பத்தி தொழில் முயற்சிக்கு மட்டுமே கடன் வழங்கப்படும். நிலம், வீடு வாங்குதல், போன்றவற்றிக்கு கடன் வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது. (54)

# புதுப்பொலிவுடன் வரணிவைத்தியசாலை

(வரணி)

வரணி பிரதேச வைத்தியசாலை பிரச்சினைகள் தற்போது படிப்படியாக நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. இவ் வைத்தியசாலைக்கு இதுவரை காலமும் அம்புலன்ஸ் வண்டி இல்லாது பெரும் குறைபாடாக இருந்தது. அண்மையில் சுகாதார அமைச்சினால் அம்புலன்ஸ் வண்டி வழங்கப்பட்டது.

தற்போது முற்பக்க வேலிகள் அகற்றப்பட்டு மதில் சுவர்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவ் வைத்தியசாலையின் இச்செயற்பாட்டால் நோயாளர் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு அடைந்திருப்பதையும் காணக் கூடியதாக உள்ளது. (150)

# விசேட தேவையுடையோரை சந்திக்கவுள்ளது உலக வங்கிக்குழு

(யாழ்ப்பாணம்)

உலக வங்கிக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் உள்ள விசேட தேவையுடையோரை நாளை சந்திக்கவுள்ளனர்.

பிரதேச செயலகங்களினூடாக உதவி பெறும் விசேட தேவையுடையோர், நலிவுற்றோரை, திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமையும் உலக வங்கிக்குழுவினர் சந்திக்கவுள்ளமை தொடர்பில் பிரதேச செயலகங்களினூடாக உதவி பெறுவோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் 10 பிரதேச செயலகங்களில் திங்கட்கிழமையும், செவ்வாய்க் கிழமையும் தென்மராட்சி பிரதேச செயலகத்திலும் இவர்களுக்கான சந்திப்புக்கள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாதாந்தம் 3000 ரூபா உதவித் தொகை பெறும் மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர் தொடர்பில் அவர்களின் வாழ்வாதாரம் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# "தோழா" இறுவட்டுக்கான முன்னோட்ட பாடல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரியின் வழிகாட்டல் ஆலோசனை சேவைப பிரிவின் கீழ் இயங்கும் இளசுகள் அணியின் மூன்றாவது ஆண்டு நிறைவு நிகழ்வும் 'தோழா' இறுவட்டுக்கான முன்னோட்டப் பாடல் வெளியீடும் யாழ்.இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் ஈழத்தின் பிரபல பொப்பிசை பாடகர் நித்தி கனகரத்தினத்தின் குரலில் அமைந்த பாடலே முன்னோட்டப்பாடலாக வெளியிடப்பட்டது. இதற்கான இசையை மதீசனும் ஒலிப்பதிவினை சத்தியனும் மேற்கொண்டனர்.

'நாடு திருந்தவென்றால்..' என்று தொடங்கும் இப்பாடலை நித்தி கனகரத்தினம் எழுதி இசையமைத்து பாட மதீசன் இசையமைத்துள்ளார்.

அன்றைய தினம் யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா இப்பாடலை வெளியிட்டு வைத்தார். (63)

# என்றும் குன்றாத ஜோதிட நம்பிக்கை துடிப்புக்களின் பலாபலன்கள்

**இடை:**

இடை துடித்தல் அபூர்வமாகவே ஏற்படும் துடிப்பு ஏற்பட்டவருக்கு சகல ஐஸ்வரியங்களும் இறையருளால் கிடைத்து விடும்.

**விரைகள்:**

விரையின் வலது பக்கம் துடிப்பின் அரசருக்கு சமமான யோகங்கிட்டும். இடது விரை எனின் விரைவில் நோயினால் பீடிக்கப்படுவார். இருபக்கவிரைகளும் ஒருசேரத்துடிப்பின் வீண் விவகாரங்களும் வழக்கும் ஏற்படலாம்.

**தொடைகள்:**

வலது கால் தொடை துடிக்கின் ஏற்பட்டுள்ள துன்பங்கள் விலகும். வழக்கில் வெற்றி கிடைக்கும். இடது கால் தொடை எனின் சுக செய்தி வந்தடையும். இரு தொடைகளும் சேர்ந்து துடிப்பின் பொன்னும் பொருளும் இனிய துணையும் சேரும்.

**முழந்தாள்:**

வலது காலின் முழங்காலில் துடிப்பு நிகழின் கோபா வேசத்திற்குள்ளாகி காரியநாசஞ் செய்துவிடுவார். இடது காலின் முழங்கா லெனின் உறவினர்கள் வந்தடைவர் இரண்டு முழங்காலும் சேர்ந்து துடிப்பின் பிறரின் மனதைக் கொள்ளை கொண்டு காரியங்களைச் சாதிப்பார்.

**கண்டைக்கால்:**

வலது கண்டக்காலெனின் செய்தொழில் இழந்து சேவகனாகி விடுவார். இடது கண்டக்காலில் ஏற்படும் துடிப்பினால் குணமடையாத நோய்களும், கவலைகளும் சேர்ந்துவிடும்.

(தொடரும்...)

ஜோதிர் வித்யா ரத்னா
வி.ஏ.சிவராசா.

# முரசின் இன்றைய பலன்



(16.03.2014 ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் பங்குனி மாதம் 02 ஆம் திகதி. பூரணை விரதம்.
பூர நட்சத்திரம் பி.ப. 01.13 வரை.
பின் உத்தரம்.
இராகு காலம் 04.50 - 06.20 வரை. சுபநேரம் 09.20 - 10.50 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | புதிதாக மின்சார இணைப்பு ஏற்படுத்த அனுமதி கிடைத்தல், சந்தைப் படுத்தலில் நட்டத்தை எதிர்பார்த்தல். |
| ரிஷபம் | பணியை நிறைவேற்ற அலைச்சல் அதிகரித்தல், பழைய நல்ல சம்பவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வுதக்க வைத்தல். |
| மிதுனம் | ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிப்பில் நட்டம் காட்டல், கைவிட்டிருந்த வெளியூர் பயணம் தொடரலாம். |
| கடகம் | போக்குவரத்தில் இடைஞ்சல் காரணமாக நிகழ்வுகளில் பங்குகொள்ளத்தடை, விருந்தினர்களின் வருகையினால் குதூகலம் அடையலாம். |
| சிம்மம் | வேலைச் சுமையால் மனச்சங்கடங்களுக்கு ஆளாகலாம், சந்தேகத்தால் குடும்ப உறவு நிலை பிளவுபடலாம். |
| கன்னி | பெற்றோர்களின் தேக நலனையிட்டுத் திருப்திப்படல், நயமாகப்பேசி காரியஞ் சாதிக்க முயல்பவர்களிடம் எச்சரிக்கை அவசியம். |
| துலாம் | மனக்கவலையிலிருந்து விடுபட ஆன்மீக நாட்டத்தில் ஈடுபடல், அதிரடியாகச் செயற்பட்டதால் அவதானம் தேவை. |
| விருச்சிகம் | கண்டிக்க முயன்றதால் குடும்பத்தில் ரகளை ஏற்படல், வியாபார ரீதியாக மனதை வாட்டிய சம்பவம் அற்றுப்போதல். |
| தனுசு | மனச்சோர்வு அகன்றதால் ஆனந்தப்படல், பிரமுகரின் சந்திப்பால் அரச வேலைவாய்ப்புப்பற்றிய நம்பிக்கை. |
| மகரம் | நீண்டநாள் எண்ணம் பூர்த்தியடைய நெருங்குதல், மனதில் தேங்கிய துயர் கலந்துரையாடலினால் அற்றுப்போதல். |
| கும்பம் | யாரைத்தான் நம்புவது என்று திக்குமுக்காடல், பண உதவிகளால் குடும்பத்தில் சர்ச்சை ஏற்படலாம். |
| மீனம் | குருகோசரம் கெட்டதாக இருப்பதினால் பயணத்தை ஒத்தி வைத்தல், மார்புச் சளிநோய் குணமடைவதால் நிம்மதி. |

# கைவிடப்பட்டது வடக்கின் போர்



(யாழ்ப்பாணம்)

நடுவரின் தவறான நடவடிக்கை காரணமாக வடக்கின் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி பரபரப்பான கட்டத்தை அடைந்தவேளை கைவிடப்பட்டுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், சென். ஜோண்ஸ் கல்லூரி அணிக்குமிடையிலான 108ஆவது வடக்கின் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதி நாள் ஆட்டம் நேற்றுக் காலை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இரண்டாவது இனிங்ஸிற்காக ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இறுதி நாள் ஆட்டத்தை யாழ். மத்திய கல்லூரி அணி தொடர்ந்தது. நேற்றைய நாள் ஆட்டத்தின் முதல் ஓவரின் மூன்றாவது பந்தில் யாழ். மத்திய கல்லூரி அணியின் இறுதி விக்கெட் மேலதிக ஓட்டங்கள் விட்டுக்கொடுக்கப்படாத நிலையில் சரிக்கப்பட்டது. இந்நிலையில் யாழ். மத்திய கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 134 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி முதல் ஓவரிலேயே இரு விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக சிந்துஜனுடன் இணைந்த சென். ஜோண்ஸ் கல்லூரி அணிக் கப்டன் துவாரகசீலன் அதிரடியாக ஆடி ஓட்டங்களை வேகமாகக் குவித்துக் கொண்டிருந்தார். இந்நிலையில் ஏழாவது ஓவரை சுழற்பந்து வீச்சாளர் மதுஷன் வீசினார். இவரின் நான்காவது பந்தை முன்நோக்கி நகர்ந்த துவாரகசீலன் ஆட முற்பட்டார். பந்து துடுப்பில் படாமல் விக்கெட் காப்பாளரின் கைகளுக்குச் சென்றது. விக்கெட் காப்பாளர் பந்தைப்பிடித்து ஸ்டம்ப் செய்யப்பட்டதாக ஆட்டமிழப்புக் கோரப்பட்டது. இதனை ஆட்டமிழப்பு என அறிவித்த நடுவர் பின்னர், மைதானத்தைவிட்டு நகர முற்பட்ட துவாரகசீலனை ஆட்டமிழப்பு இல்லை என அழைத்தார். அதாவது ஸ்டம்பில் உள்ள வேல்ஸ் விழாததன் காரணமாக ஆட்டமிழப்பு இல்லை என நடுவர் அறிவித்தார். இதன் காரணமாக கோபமடைந்த ஆதரவாளர்கள் மைதானத்திற்குள் நுழைந்து நடுவரைத் தாக்கினார்கள். இதனால் போட்டி தடைப்பட்டது. சமரசம் செய்யும் வகையில் இரு கல்லூரி அதிபர்கள், பழைய மாணவர்கள், நடுவர்கள் மத்தியில் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இப்பேச்சுவார்த்தை 1.45 மணி வரை சுழற்சி முறையில் நடைபெற்றது.

இறுதியில் போட்டி கைவிடப்பட்டதாக இரு கல்லூரி அதிபர்களும் அறியத் தருவதாக ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது. தடைப்பட்ட போட்டி மீண்டும் நடைபெறும் என கால் கடுக்க காத்திருந்த ஆதரவாளர்கள், இரசிகர்கள் விரக்தியுற்று அங்குமிங்குமாக அலைந்து திரிந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதேவேளை, முடிவை நோக்கி பயணித்த இப்போட்டியை மேலும் தொடர முற்பட்டால் அது பல விளைவுகளை ஏற்படுத்தும் என்ற காரணத்தினாலேயே கைவிடப்பட்டதாக இரு கல்லூரிச் சமூகத்தைச் சேர்ந் தோரால் தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது ஏதோவொரு அணி தோல்வியரடயும் நிலையில், அந்த அணி ஆதரவாளர்கள் கோபமடைய அதிக வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் என்பதாலும், அதன் காரணமாக ஏற்படக் கூடிய விளைவுகளை தவிர்க்கும் நோக்குடனுமேயே போட்டியை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (எஸ்.பி.48,42,20)



## கிளிநொச்சியில் குத்துச் சண்டைப் பயிற்சி

(கிளிநொச்சி)

இலங்கை குத்துச் சண்டை சம்மேளனம் வடக்கு மாகாண வீரர்களுக்கான இலவச குத்துச்சண்டை பயிற்சி வகுப்புகளை கிளிநொச்சியில் நடாத்தி வருகின்றது. 15 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கே இப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற இப்பயிற்சி இன்று வரை நடைபெறவுள்ளது.

இலவசமாக நடாத்தப்பட்டுவரும் இப் பயிற்சிகளில் சீருடை, உணவு தங்குமிட வசதி வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. வெளிமாவட்டத்திலிருந்து சென்றோருக்கு போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (43)

## விமானப்படையின் 63ஆவது ஆண்டு நிறைவு

# மாபெரும் சைக்கிளோட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை விமானப்படையின் 63ஆவது ஆண்டு நிறைவினையொட்டி 15ஆவது முறையாகவும் இடம்பெறவுள்ள சைக்கிளோட்டப்போட்டியினை இலங்கை விமானப்படை சைக்கிளோட்ட சம்மேளனம் எதிர்வரும் 20, 21 மற்றும் 22 ஆகிய திகதிகளில் நடாத்த தீர்மானித்துள்ளது.

இப்போட்டியினை நடாத்துவதற்கு முக்கிய காரணம் இலங்கையிலுள்ள போட்டியாளர்களுக்கிடையில் போட்டித் தன்மையினை ஏற்படுத்தி இலங்கையில் இத்துறையினை மேம்படுத்துவதாகும்.

மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ள இப்போட்டி தேசிய சைக்கிளோட்ட சம்மேளனத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக இடம்பெறவுள்ளது. 20ஆம் திகதியன்று கொழும்பில் இருந்து தம்புள்ள வரை 147 கிலோ மீற்றர் தூரம் கொண்டதாக முதல் நாள் போட்டியும், 21ஆம் திகதி தம்புள்ளயில் இருந்து வவுனியா வரை 120 கிலோ மீற்றர் தூரம் கொண்டதாக இரண்டாம் நாள் போட்டியும், 22ஆம் திகதி வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை (141 கிலோமீற்றர் தூரம் கொண்டதாக மூன்றாம் நரள் போட்டியும் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் முதலாமிடத்தினைப் பெறுபவருக்கு 3இலட்சம் பெறுமதியான பணப்பரிசும், இரண்டாமிடத்தினை பெறுபவருக்கு 2இலட்சம் பெறுமதியான பணப்பரிசும், மூன்றாமிடத்துக்கு 1 இலட்சம் பெறுமதியான பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது. இப்போட்டியில் 15ஆவது வரை இடங்களைப் பெறுபவர்களுக்கு பணப்பரிசு வழங்கப்படவுள்ளது.

பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியில் முதலாமிடத்தைப் பெறுபவருக்கு ரூ 50,000 பெறுமதியான பணப்பரிசும், இரண்டாமிடத்திற்கு ரூ 30,000 பெறுமதியான பணப்பரிசும், மூன்றாமிடத்திற்கு ரூ 20,000 பெறுமதியான் பணப்பரிசும் நான்காமிடத்திற்கு ரூ. 15,000 பெறுமதியான பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது.

இப்போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் கோலித குணதிலகவின் தலைமையில் நடைபெறவுள்ளது.




# இலங்கை கடற்கரையில் அனுஷ்காவுடன் ஹோலி

(மும்பை)

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான வீராட் ஹோலி இந்தி நடிகை அனுஷ்கா சர்மாவை காதலித்து வருவது அனைவரும் அறிந்த ஒன்றாகும். இருவரும் பல்வேறு இடங்களில் ஒன்றாக சுற்றி திரிந்து வருகின்றனர்.

இந்திய அணி நியூசிலாந்தில் சமீபத்தில் விளையாடிய போது வீராட் ஹோலியை பார்ப்பதற்காக அனுஷ்கா சர்மா நியூசிலாந்து சென்றார். அங்கு இருவரும் ஒன்றாக சுற்றினர்.

இந்த நிலையில் வீராட் ஹோலியும், அனுஷ்கா சர்மாவும் இலங்கை கடற்கரையில் காதல் விளையாட்டில் ஈடுபட்ட தகவல் வெளியாகி உள்ளது.

அனுஷ்கா சர்மா படப்பிடிப்பிற்காக இலங்கை சென்றிருந்தார். ஆசிய கோப்பை போட்டியில் விளையாடி விட்டு நாடு திரும்பியவுடன் ஹோலி காதலியை பார்ப்பதற்காக இலங்கை சென்றார்.

படப்பிடிப்பு இல்லாத சமயத்தில் இருவரும் அங்குள்ள கடற்கரையில் ஒன்றாக இணைந்து சுற்றித் திரிந்தனர். கடந்த சில தினங்களாக காதலியுடன் ஜாலியாக இருந்து விட்டு ஹோலி நேற்று முன்தினம்தான் மும்பை திரும்பினார். ருவென்ரி-20 உலக கோப்பை போட்டிக்கான இந்திய அணி நேற்று முன்தினம் பங்களாதேஷ் சென்றது. இதற்காக அவர் அணியுடன் இணைந்து கொண்டார். ஆசிய கோப்பை போட்டியில் டோனி இல்லாததால் ஹோலி கப்டனாக பணியாற்றினார்.

# உலகக் கிண்ண ருவென்ரி-20 பங்களாதேஷில் இன்று ஆரம்பம்

(டாக்கா)

ஐந்தாவது உலகக் கிண்ண. ருவென்ரி-20 போட்டித் தொடர் இன்று பங்களாதேஷில் ஆரம்பமாகவுள்ளது.சர்வதேச கிரிக்கெட் சபையால் நடாத்தப்படும் இப்போட்டி எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆறாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

16 அணிகள் பங்கேற்கும் இப்போட்டித் தொடரில் பங்கேற்கின்றன. ஐ.சி.சி.யின் தரவரிசையில் முதல் 10 இடங்களில் இருக்கும் அணிகள் நேரடியாகத் தகுதி பெற்றுள்ளன. ஏனைய ஆறு அணிகள் ஐ.சி.சி.யின் துணை அங்கத்துவ நாடுகளுக்கிடையில் நடைபெற்ற தகுதி காண் போட்டிகளின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.தரவரிசையில் முதல் எட்டு நிலைகளில் இருக்கும் அணிகள் சுப்பர் 10 சுற்றுக்கு நேரடியாகத் தகுதி பெற்றுள்ளது. ஏனைய இரண்டு இடங்களுக்கும் தகுதிபெற எட்டு அணிகள் மோதவுள்ளன. இந்த எட்டு அணிகளில் முதல் சுற்றுப் போட்டி ரவுண்ட் றொபின் முறையில் நடைபெறவுள்ளது.

இரண்டாவது சுற்றுப் போட்டி சுப்பர் 10 இல் இருக்கும் நாடுகள் மோதும். இந்தச் சுற்றுப் போட்டி விலகல் முறையில் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 3.00 மணிக்கு மிர்பூரில் நடைபெறவுள்ள முதல் போட்டியில் பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் அணிகள் மோதவுள்ள அதேவேளை, 7.00 மணிக்கு சிட்டாகொங்கில் நடைபெறவுள்ள போட்டியில் ஹொங்கொங், நேபாளம் அணிகள் மோதவுள்ளது.

ICC WORLD TWENTY20 Bangladesh 2014



## தலைமுறையின் சிறந்த வீரர் விருது வென்றார் சச்சின் டெண்டுல்கர்

(மும்பை)

தலைமுறையின் சிறந்த கிரிக்கெட் வீரர் விருதை இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் தட்டிச் சென்றார்.

கிரிக் இன்போ இணையதளம் சார்பில் 1993 முதல் 2013 வரையிலான 20 ஆண்டுகளில் சிறந்து விளங்கிய வீரர் தேர்வு நடாத்தப்பட்டது. ராவிட், லக்ஸ்மன், வக்கார் யூனிஸ், இயன் சப்பல் உள்ளிட்ட முன்னாள் வீரர்கள், வர்ணனையாளர்கள், பத்திரிகையாளர்கள் என, 50 பிரபலங்கள் அடங்கிய நடுவர்கள் குழு சிறந்த வீரரை தேர்வு செய்தது.

தலைமுறையின் சிறந்த வீரர் என்ற பெயரிலான இவ்விருதுக்கான இறுதிப் பட்டியலில் இந்தியாவின் சச்சின், தென்னாபிரிக்காவின் கலிஸ், அவுஸ்ரேலியாவின் ஷேன் வோர்ன் உள்ளிட்டோர் இடம்பெற்றனர்.

இந்த மூன்று பேர் கொண்ட பட்டியலில் இருந்து, விருதுக்கான வீரர் நேற்று முன்தினம் தேர்வு செய்யப்பட்டார். இதில் கலிஸ், வோர்னை பின்தள்ளிய சச்சின், தலைமுறையின் சிறந்த வீரராக தேர்வாகினார்.

அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான அறிமுக டெஸ்டில் 187 ஓட்டங்கள் குவித்த இந்திய வீரர் தவான், கடந்த ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீரராகத் தேர்வானார்.

சிறந்த டெஸ்ட் பந்துவீச்சாளர் விருது, அவுஸ்ரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் மிட்சல் ஜோன்சனுக்கு கிடைத்தது.

அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான பெங்களூரில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில், இரட்டைச் சதம் அடித்த, இந்திய வீரர் ரோகித் சர்மா, சிறந்த ஒருநாள் துடுப்பாட்ட வீரர் விருதை தட்டிச் சென்றார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான போட்டியில் 12 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களை வீழ்த்தியுடன் 55 பந்துகளை எதிர்கொண்டு 76 ஓட்டங்கள் குவித்த, பாகிஸ்தான் அணியின் அதிரடி வீரர் அப்ரிடி சிறந்த ஒருநாள் பந்துவீச்சாளர் விருதை வென்றார்.

## கிண்ணம் வெல்ல எமக்கும் வாய்ப்புண்டு



(கொழும்பு)

ஏனைய அணிகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை அணி சிறந்த கலவையைக் கொண்டுள்ளது. துடுப்பாட்டம், பந்து வீச்சு, சகலதுறை வீரர்கள் என முத்திரை பதிக்கக் கூடிய வீரர்கள் அணியில் அங்கம் வகிக்கின்றனர். இதன் மூலம் உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரில் கிண்ணத்தை வெல்லக்கூடிய அதிக வாய்ப்பு எங்கள் அணிக்கு இருக்கின்றது என இலங்கைக் கிரிக்கெட் தெரிவுக்குழுத் தலைவர் சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

போட்டிக்கு ஏற்றவாறு சகலதுறை வீரர்களை நாங்கள் பயன்படுத்தவேண்டும். பங்களாதேஷில் எமது வீரர்கள் திறமையை வெளிப்படுத்தியுள்ளனர். இதற்கு ஆசியக் கிண்ண ஒரு நாள் தொடரில் கிண்ணத்தை வென்றமை சிறந்த உதாரணம். 15 பேர் கொண்ட அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் மைதானத் தன்மைக்கு ஏற்றவாறே பயன்படுத்தப்படுவார்கள். குறிப்பாக, சகலதுறை வீரர்கள் மற்றும் சுழற்பந்து வீச்சாளர்கள் இந்த அடிப்படையில்தான் களமிறக்கப்படுவார்கள்.

2012 உலக ருவென்ரி-20 போட்டிகளில் மஹேல ஜெயவர்தன ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக சிறப்பாக செயற்பட்டார். அதேபோன்று அண்மைய ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் லஹிரு திரிமன்ன பிரகாசித்தார். அணியில் ஆரம்ப வீரர்கள் தாராளமாக உள்ளனர். எனவே சந்தர்ப்பத்திற்கேற்ப சிந்தித்து செயற்படுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐ.பி.எல். அனுபவம் கைகொடுக்கும்



(டாக்கா)

உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரில் சாதிப்பதற்கு ஐ.பி.எல். அனுபவம் உதவிகரமாக இருக்கும் என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார். நாங்கள் நிறைய ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி இருக்கிறோம். ஆனால் அது ருவென்ரி-20 ஓவர் சர்வதேச போட்டிகளாக இல்லையே என்று நீங்கள் சொல்லலாம். என்றாலும் அணியில் இடம்பெற்றுள்ள எல்லா வீரர்களும் அதிகமான ஐ.பி.எல். போட்டிகளில் ஆடியிருக்கிறார்கள். ஐ.பி.எல். போட்டி சர்வதேச தரம் வாய்ந்தது மட்டுமன்றி, அதில் உலகின் தலைசிறந்த வீரர்களுடன் விளையாடியுள்ளோம். எனவே ஐ.பி.எல். அனுபவம் எங்களுக்கு நிச்சயம் உதவிகரமாக இருக்கும். இதே போல் பங்களாதேஷில் உள்ள சீதோஷ்ண நிலை இந்தியாவை போன்றே இருக்கும். அங்குள்ள ஆடுகளத்தன்மை பற்றி நன்கு தெரியும் என்பதால், அது பந்து வீச்சாளர்களுக்கு கைகொடுக்கும். உலகக் கோப்பைக்கு முன்பாக இரண்டு பயிற்சி ஆட்டங்களிலும் விளையாட உள்ளோம். பயிற்சி ஆட்டங்களில் எல்லா வீரர்களையும் பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்போம். அணியில் இடம் பிடித்துள்ள அனைவரையும் ஆட வைப்பதன் மூலம், எது சிறந்த வெற்றி கூட்டணி என்பதை அறிய வாய்ப்புக் கிடைக்கும். கடந்த ருவென்ரி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நாங்கள் ஒரே ஒரு ஆட்டத்தில் மட்டுமே தோற்றோம். ஆனாலும் போட்டியை விட்டு வெளியேற நேரிட்டது. எனவே ஒவ்வொரு ஆட்டங்களும் முக்கியமானது. தொடர் முழுவதும் எங்களது சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியாக வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



## முன்னேற்றம்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள இன்டியன்வேல்ஸ் நகரில் பி.என்.பி.பரிபாஸ் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் 8ஆம் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிஸ்) 7-5, 6-1 என்ற நேர் செட்டில் கெவின் அண்டர்சனை (தென்னாபிரிக்கா) வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். அரையிறுதியை எட்டியதன் மூலம் பெடரர் தர வரிசையில் 5ஆவது இடத்துக்கு முன்னேறுகிறார்.

# தொடரை வென்றது அவுஸ்ரேலியா

(செஞ்சூரியன்)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான மூன்றாவது ருவென்ரி-20 போட்டியில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலிய அணி தொடரை 2-0 என கைப்பற்றியது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள அவுஸ்ரேலிய அணி மூன்று போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 தொடரில் பங்கேற்றது. முதல் போட்டி மழையால் இரத்தானது. இரண்டாவது போட்டியில் அவுஸ்ரேலிய அணி வென்றது. மூன்றாவது மற்றும் கடைசிப் போட்டி செஞ்சூரியனில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குயின்டன் டிகொக் 41, டுமினி 13, டிவில்லியர்ஸ் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் மைக்ஸ்வெல், ஸ்டார்க் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 129 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி 15 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.




இதில் பின்ஞ் 39, வட்சன் 35, வைட் 14 ஓட்டங்களைப் பெற்றனர். இதன் மூலம் ஆறு விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி மூன்று போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. போட்டியின் ஆட்ட நாயகன் விருதை ஸ்டார்க், தொடர் நாயகன் குயின்டன் டி கொக் ஆகியோர் வென்றனர்.

ருவென்ரி-20 தொடரை வென்றது மகிழ்ச்சி அளிக்கின்றது. அத்துடன் உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரில் பங்கேற்கும் எமக்கு புத்துணர்வு மிக்க உற்சாகத்தை ஏற்படுத்தும் ஒரு தொடர் வெற்றியாகவே இதை நாங்கள் பார்க்கின்றோம். இதன் காரணமாக உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரில் சாதிப்போம் என அவுஸ்ரேலிய அணிக் கப்டன் பெய்லி தெரிவித்துள்ளார்.

# இலங்கையை சர்வதேச பிடியிலிருந்து அமெரிக்கா மூன்றாவது முறையும் காப்பாற்றிவிட்டது



இலங்கை தொடர்பாக தாம் ஐ.நா. மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கவிருக்கும் பிரேரணையின் நகலை அமெரிக்கா கடந்த திங்கட்கிழமை பேரவையின் உறுப்பினர்களிடம் கையளித்தது எனினும் இலங்கையின் மனித உரிமை நிலைவரம் தொடர்பாக சர்வதேச விசாரணையொன்றை நடாத்துவதை அமெரிக்கா அதன் மூலம் மேலும் ஒத்திப் போட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் அமெரிக்காவின் பிரேரணைகள் தொடர்பாக அந்த நாட்டை விமர்சித்தாலும் அமெரிக்கா தமது பிரேரணைகள் மூலம் இலங்கையை சர்வதேச பிடியிலிருந்து காப்பாற்றி விட்ட மூன்றாவது முறை இதுவாகும்.

இலங்கையில் இடம் பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்பதே 2012 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பான அமெரிக்காவின் முதலாவது பிரேரணை முன்வைக்கப்படும் முன் சர்வதேச மட்டத்தில் இருந்த பொதுவான அபிப்பிராயமாகும். இலங்கை விடயத்தில் தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி மூன், மர்சூகி தருஸ்மானின் தலைமையில் நியமித்த குழுவும் சர்வதேச விசாரணையையே சிபார்சு செய்திருந்தது.

ஆனால், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் படி தேசிய விசாரணை நடாத்த வேண்டும் என்று வலியுறுத்தி 2012 ஆம் ஆண்டு அமெரிக்கா மனித உரிமை பேரவையில் சமர்ப்பித்த பிரேரணையின் மூலமே அந்த நிலைமை மாறியது.

அதன்பின்னர், கடந்த வருட ஆரம்பத்தில் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை பேரவையில் சமர்ப்பித்த அறிக்கையிலும் இலங்கை விடயத்தில் சர்வதேச விசாரணையொன்று கோரப்பட்டிருந்தது.

ஆனால், அதற்குச் சில தினங்களுக்குப் பின்னர் அமெரிக்கா சமர்ப்பித்த இரண்டாவது பிரேரணையிலும் சர்வதேச விசாரணைக்கு இடம் கொடுக்கப்படவில்லை. அந்தப் பிரேரணையின் மூலமும் அமெரிக்கா நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுலாக்க வேண்டும் என்றே மீண்டும் கூறியது.

அந்த முறையும் இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகம் திருப்தியுறும் வகையில் நடந்து கொள்ளவில்லை. எனவே மனித உரிமை ஆணையாளர் இதற்குச் சில தினங்களுக்கு முன்னர் சமர்ப்பித்த அறிக்கையில் சர்வதேச விசாரணையை மிகப் பலமாக வலியுறுத்தியிருந்தார். எனவே இந்த முறை அமெரிக்கா சமர்ப்பித்த மூன்றாவது பிரேரணையில் சர்வதேச விசாரணையொன்று சிபாரிசு செய்யப்பட்டு இருக்கும் என பலர் நினைத்தனர்.

ஆனால் அதுவும் நடக்கவில்லை. இந்த முறை அதாவது மூன்றாவது தடவையாக அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணையிலும் சர்வதேச விசாரணை சிபார்சு செய்யப்படவில்லை. இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளை மீறியோருக்கு எதிராக உள்நாட்டு விசாரணை நடாத்தாவிட்டால் சர்வதேச விசாரணை நடாத்த வேண்டியிருக்கும் என்றே இம்முறை பிரேரணை கூறுகிறது.

தமிழ்நாட்டிலும் புலம் பெயர் தமிழர்கள் மத்தியிலும் இது பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

வடமாகாண சபைக்கு உரிய அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று பிரேரணை கூறுவதால் இந்த வாசகத்தின் பின்னால் இந்தியா இருக்க வேண்டும் அல்லது இந்தியாவை பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கச் செய்வதற்காக அமெரிக்கா இந்த வாசகத்தை திணித்து இருக்க வேண்டும்.

சமயத் தலங்கள் மீதான தாக்குதல்களைப் பற்றி விசாரணை நடாத்தி சம்பந்தப் பட்டவர்களை சட்டத்தின் முன் கொண்டு வருமாறு பிரேரணை கூறுகிறது. சிலவேளை இதற்கு முந்திய பிரேரணைகளின் போது பல முஸ்லிம் நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தமையினால் அமெரிக்கா இந்த வாசகத்தை பிரதான வாசகங்களில் ஒன்றாக குறிப்பிட்டு இருக்கலாம். இது போன்ற வாசகங்களும் பிரேரணையில் இருக்கையில் முஸ்லிம் நாடுகள் அதனை எதிர்ப்பது கஷ்டமாக இருக்கும்.

அரசியல் நோக்கங்களை மதியாது இந்த பிரேரணையைப் பார்த்தால் எந்தவொரு நாடும் அதனை எதிர்ப்பது கடினமாகவே இருக்கும். அந்த அளவுக்கு அதன் வாசகங்கள் நியாயமாக தெரியும் விதத்தில் அமைந்துள்ளது. போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களைப் பற்றி இலங்கை தாமாகவே விசாரணை நடாத்திக் கொள்ள வேண்டும் என்று பிரேரணை கூறும் போது எந்த நாடு தான் அதனை எதிர்க்க முடியும்?

அதேபோல் அரசாங்கம் தாமாகவே நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுலாக்க வேண்டும் என்றும் நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களை வழங்க வேண்டும் என்றும் வெலிவேரிய சம்பவம் தொடர்பாக தமது படைகளே நடாத்திய விசாரணையின் அறிக்கையை அரசாங்கம் வெளியிட வேண்டும் என்றும் சமயத் தலங்கள் மீது தாக்குதல் நடத்தியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறும் போது அதில் என்ன தவறு இருக்கிறது?

இறுதியாக அரசாங்கம் இவற்றை செய்யவிட்டால் சர்வதேச விசாரணை நடாத்தி சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் கொண்டு வர வேண்டும் என்று பிரேரணை கூறும் போது அதனை எவரால் தான் எதிர்க்க முடியும்?

எனவே இலங்கை அரசாங்கம் புத்திசாலித் தனமாக நடந்து கொள்வதாக இருந்தால் அடுத்த வருடம் மனித உரிமை பேரவை சர்வதேச விசாரணையை முடுக்கிவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

இதற்காக அரசாங்கம் ஏதும் பெரிதாக செய்யத் தேவையில்லை. பிரேரணையை நன்றாக விளங்கிக் கொள்வது மட்டுமே போதுமானதாகும். உதாரணமாக அரசாங்கம் மாகாண சபை முறையை இரத்துச் செய்ய எடுத்த முயற்சியே வடமாகாண சபையின் பிரச்சினையை ஜெனிவா வரை எடுத்துச் சென்றது. இந்தியா அருகில் இருக்கும் போது அவ்வாறு செய்ய முடியாது என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்க வேண்டும். அதன்படி போர் முடிவடைந்த உடன் வட மாகாண சபைத் தேர்தலை நடாத்தி மாகாண சபை நிர்வாகத்தை ஸ்தாபித்து இருந்தால் அப் பிரச்சினை ஜெனிவா சென்றிருக்காது.

அதேபோல் சமயத் தலங்கள் தாக்கப்படும் போது அரசாங்கம் நாட்டின் சட்டத்தை அமுலாக்கியிருந்தால் அந்தப் பிரச்சினையும் ஜெனிவா சென்றிருக்காது.

**– எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து.**

## சாப்பாடுதான் காரணமா?



கருணாநிதியை, ஒருநாள் மாலை நேரத்தில் சந்தித்தேன். ஆற்காடு வீராசாமியும் உடனிருந்தார். அப்போது, எம்.ஜி.ஆர்., பள்ளிக் குழந்தைகளுக்கு, இலவச சத்துணவுத் திட்டத்தை அறிவித்திருந்தார். கருணாநிதி இதுபற்றி, எங்களிடம் கருத்துக் கேட்டார். நான் மனதில் பட்டதை தயங்காமல் சொன்னேன்... “இது, பெற்றோர்களை குழந்தைகளுக்காக, உழைக்கும் கடமையிலிருந்தும், எண்ணத்திலிருந்தும், பொறுப்புணர்வினை மறக்கச் செய்து, சோம்பேறித்தனத்திற்கு தள்ளக்கூடும். இருப்பினும், கிராமப்புறங்களில் ஏழை, எளிய மக்கள், தங்கள் குழந்தைகள் ஒரு வேளையாவது சாப்பிடும் போது, எம்.ஜி.ஆரை வாழ்த்துவதை தவிர்க்க முடியாது...” என்றேன்.

மேலும், கருணாநிதியிடம், நம்மிடம் இருக்கிற அனைத்து சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தங்களுடைய ஒரு மாத சம்பளத்தை சத்துணவு திட்டத்திற்காக தர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து, காசோலை பெற்று, முதல்வர் எம்.ஜி.ஆரிடம், அந்தக் காசோலையை கொடுக்கலாம். ஒரு வேளை, அதை அவர் வாங்க மறுத்தால், ஒரு முறை புயல் நிவாரண நிதிக்காக, தி.மு.க., திரட்டிய நிதியை தலைமைச் செயலராக இருந்த கார்த்திகேயனிடம் கொடுத்த போது, அவர் அதை நிராகரித்ததை, பெரிய அரசியலாக்கியதைப் போல், இதையும் மக்கள் முன்னால் வைத்து, பிரச்சினை ஆக்கலாம்...” என்று நானும், அங்கிருந்த மற்றவர்களும் கூறினோம்.

“நல்ல கருத்து” என்று கூறிய கருணாநிதி, எங்களுக்கு விடை கொடுத்தார். சற்று நேரத்தில், வேறு சிலர் வந்திருந்தனர். அவர்கள் கருணாநிதியிடம் ஏதோ கூறி, அவர் மனதை மாற்றி விட்டனர். பின்னர் கருணாநிதி, அத்திட்டத்தை பற்றி எங்களிடம் கேட்கவேயில்லை.

மாறாக, கழக சார்புடைய ஏடுகளிலெல்லாம், சத்துணவுத் திட்டத்தை குறை கூறுவது போல், “சத்துணவில் பல்லி இருக்கிறது; பத்து மாணவர்கள் மயக்கம், சத்துணவை சாப்பிட்ட நூறு மாணவர்கள் வாந்தி...” என்று நையாண்டி செய்து, எழுத ஆரம்பித்தனர். இது போன்ற செயல், தி.மு.க.,வின் வெற்றிக்கு, பின்னடைவு ஏற்படுமென்று, அன்றே உணர்ந்தேன்.

அப்போது, நடந்த சட்டசபை பொதுத்தேர்தலில் வெற்றி வாய்ப்பை, தி.மு.க., இழந்தது. “டிவி” முன் அமர்ந்து, தேர்தல் முடிவுகளை கருணாநிதி பார்த்துக் கொண்டிருந்த போது, அவர் அருகில், வாய் திறவாமல் அமர்ந்திருந்தேன். “என்ன கலாநிதி... இப்படி ஆகிவிட்டது...” என்று, என்னிடம் சொன்ன போது, நான் பேசாமல் சிரித்தபடி அமர்ந்திருந்தேன். பின், அவரே, “நீ சொன்னது சரியா போச்சு. இத்தனைக்கும் காரணம், சாப்பாடுதானா...” என்றார்.

**- ‘அரசியல் அனுபவங்கள்’ நூலில், டாக்டர். அ. கலாநிதி.**

## முடி எண்ணியது எப்படி?

சீனாவைச் சேர்ந்த, ஓய்வு பெற்ற ஆசிரியை, ஷியாங். இவருக்கு, இருந்த அடர்த்தியான கூந்தல் சில ஆண்டுகளுக்கு முன், உதிரத் தொடங்கியது. அதற்காகக் கவலைப்படாமல், உதிர்ந்த முடிகளை எல்லாம், வீணாக்காமல் சேர்த்து வைத்தார். சமீபத்தில், அந்த முடிகளால், அழகிய மேலாடையையும், தொப்பியையும் தயாரித்து அசத்தியுள்ளார்.

“என் அடர்த்தியான கூந்தல் மீது, பலருக்கும் பொறாமை. என் கூந்தல் உதிர்ந்தபோது, இந்த வயிற்றெரிச்சல் கோஷ்டி சந்தோஷப்பட்டது. அவர்களுக்குப் பதிலடி கொடுப்பதற்காகவே, உதிர்ந்த முடிகளை எல்லாம் சேகரித்து வைத்து, இந்த புதுமையான உடையை வடிவமைத்தேன். இதற்காக 11 ஆண்டுகளாக, முடிகளை பத்திரமாக பாதுகாத்து வந்தேன். மேலாடை தயாரிப்பதற்கு, 89,112 முடிகளும், தொப்பி தயாரிப்பதற்கு, 29,496 முடிகளும் தேவைப்பட்டன...” என்கிறார் ஷியாங்.





# செல்வமனோகரியின் "மழுங்கடிக்கப்பட்ட அடையாளங்களும்"

**குறிப்பு:**

**தினமுரசு நாளிதழில் உங்கள் நூல்களுக்கான விமர்சனமும் அறிமுகக் குறிப்பும் வெளியாவதற்கு, நூலின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பிவையுங்கள். அடுத்த வாரம் அனாரின் "பெருங்கடல் போடுகிறேன்" கவிதைப் புத்தகத்திற்கான விமர்சனக் குறிப்பு வெளியாகும்.**

- வெள்ளைக்கிருஷ்ணன் -

ஏறக்குறைய இருபது ஆண்டுகளாக கவிதைகளை எழுதிக்கொண்டிருக்கும் செல்வமனோகரியின் முதலாவது புத்தகம் - "மழுங்கடிக்கப்பட்ட அடையாளங்களும்" என்று இப்பொழுதுதான் வந்திருக்கு. கவிஞர்கள் சோ. பத்மநாதன் முன்னுரையையும் அனார் பின்னுரையையும் எழுதியிருக்கிறார்கள். 110 பக்கங்கள் உள்ள இந்த நூலில் 63 கவிதைகள் உள்ளன. துயரமும் நம்பிக்கையுமாய் வாழ்க்கை அமைந்திருப்பதையும் நாட்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதையும் தன்னுடைய கவிதைகளில் அதிகமாக எழுதிச் செல்கிறார் செல்வமனோகரி. எளிமையான கவிதைகளில் வலி நிரம்பியிருக்கிறது. அந்த வலியிலும் துளியளவு நம்பிக்கையும் மகிழ்ச்சித்தருணங்களும் உள்ளன. இந்தத் துளி நம்பிக்கை சாதாரணமான ஒன்றல்ல. விதையைப் போன்றது. அது எல்லையற்று விரிந்து சடைக்கும் வினைத்திறன் உடையது.




"உனக்குத் தெரியுமா
இந்த அழகான கவிதைக்கு
ஓர் அழகான மனதின்
சிதைவுதான் உரமென்பது..."

**(தேய்வு) பக்கம் 36.**

அதிகாரம், புறக்கணிப்பு, புரிதலின்மை என்பவற்றினால் கணமும் தினமும் எங்கும் மனங்கள் சிதைக்கப்பட்டுக்கொண்டேயிருக்கின்றன. மனித வரலாறு நீட்டுக்கும் இந்தச் சிதைவுகளையும் வலியையும் காணலாம். இது அறிவு கோலோச்சும் [illegible]. என்றாலும் மனங்களைக் காயப்படுத்தும் இழிநிலை இன்னும் நீங்கி விடவில்லை. அது நம் அருகிலிருந்தே சிதைப்புகளைச் செய்து கொண்டிருக்கிறது. உறவாகவும் நட்பாகவும் அதிகார அமைப்பாகவும் எனப் பல நிலைகளில். ஆனால், என்னதான் இருந்தாலும் இந்தச் சிதைவுகளையே உரமாக்கும் வலிமை உடைய இதயங்களும் வரலாறு நீளத்துக்கும் உள்ளன. வரலாற்றின் இயங்கு விதியை இவைதான் உருவாக்கிக் கொண்டும் உயிர்ப்பித்துக்கொண்டும் இருக்கின்றன. தானும் அதில் ஒன்று என்று உணர்த்துகிறார் செல்வமனோகரி. சிதைப்புக்கும் ஒருங்கு கூடலுக்குமான தொடர் போராட்டத்தையும் இடைவிடாத நிகழ்ச்சியையும் மிகச் சுலபமான வார்த்தைகளால் வெளிப்படுத்துகிறார்.

"இந்தக் கடைசித் தொலைவைக்
கடக்கும் வலிமை
அந்த வரம்
எனக்கில்லை என்று நீ...
................
...............
துன்புறுத்தும் நினைவுகளாய்
என் பாதையில்
நீயிட்ட தடைகள் மட்டுமே
ஞாபகத்திலிருந்தன.

இந்த இடைவெளியைக் கடப்பேன்
அந்த விதானத்தைத் தொடுவேன்"

**(கடைசித் தொலைவு) பக்கம் 42**

இப்படிப் பல கவிதைகள் செல்வமனோகரியையும் அவருடைய கவிதை உலகத்தையும் அறிமுகப்படுத்தி, தனியாக அடையாளப்படுத்துகின்றன. செல்வமனோகரியின் கவிதைகளைக் குறித்து அனார் எழுதியிருக்கும் பின்னுரை தனியான கவனத்திற்குரிய ஒன்று. இலக்கியம் குறித்த அனாரின் பார்வையையும் செல்வமனோகரியின் கவிதைகளைப் பற்றிய அவருடைய உணர்தல்களையும் அந்தப் பின்னுரை வெளிப்படுத்துகிறது. "...ஒரு பெண்ணிடம் வருகின்ற கவிதைத் தருணங்கள் அவளுடைய நெற்றிக் கண்ணாகவும் ஆன்மாவின் குரலாகவும் உயிரில் துளிர்க்கின்ற கண்ணீராகவும் அவளுக்கான சிறகுகளாகவும் சாளரங்களாகவும் மாற்று உருவங்களைக் கொண்டிருக்கின்றன. மனோகரியின் பல கவிதைகளில் நதி ஒரு படிமமாக ஓடிக்கொண்டேயிருக்கின்றது. உண்மையில் அவை ஒன்று போலவே இருக்கும் வெவ்வேறு நதிகள்...." (அனார் - பக்கம் 106)

பெரும்பாலும் கையறு நிலையை வெளிப்படுத்தும் செல்வமனோகரியின் கவிதைகள் எங்களின் வாழ்க்கை நிகழ்ந்த காலத்தின் அடையாளங்கள். அந்த வாழ்க்கையின் மெய்முகம். சோ.ப கூறுவதைப் போல "செல்வமனோகரி காணும் காட்டும் உலகம் ஏன் நமக்கு எந்த நம்பிக்கையையும் தருவதாக இல்லை?"

ஏனென்றால் "செல்வமனோகரி கவிதையுலகில் நுழைந்த காலம் போரும் இழப்பும் புலப்பெயர்ச்சியுமாய் நாம் நலிவுற்ற காலம். அவருடைய நம்பிக்கை ஆட்டங்கண்டிருந்தால் அதைப் புரிந்து கொள்ள முடியும்" (சோ.ப - பக்கம் xiv)

தமிழ்க்கவிதையில் இன்னும் ஒரு பெண்குரல் தீரமாய், வலியாய், பாடுகளின் சாட்சியாய், எதிர்ப்புணர்வின் அடையாளமாய்.. நமக்கிடையில் நம்மோடு கலந்திருக்கிறது.





# கலர் கலராய் உணவு!

கார்மோய்சின், பிரில்லியண்ட் ப்ளூ, தார்த்ராசைன், சன்செட் யெல்லோ, போன்கியாங் 4 ஆர், எரிஸ்த்ரோசின், ரோடாமின் பி - இவையெல்லாம் உணவுப் பொருட்களில் சேர்க்கப்படும் வண்ணங்களில் உள்ள இரசாயனப் பொருட்கள். அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் நாடுகளில் தடை செய்யப்பட்டவை. நம்நாட்டிலோ கண்டு கொள்ளாமல் விடப்படுபவை.

இந்த வண்ணங்களால் புற்றுநோய் ஏற்படும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

பிரியாணி, ஐஸ் கிரீம்களில் சேர்க்கப்படும் வண்ணத்தில் பிறில்லியன்ட் ப்ளூா உள்ளது. இது குழந்தைகளின் உடலில் குரோமோசோம்களைப் பாதிக்கும்.

அல்வாவில் உள்ள சிவப்புநிறம் கார்மோசின் என்ற இரசாயனப் பொருளால் ஏற்படக் கூடியது. இது அலர்ஜியை ஏற்படுத்தும்.

குளிர்பானங்கள், ஊறுகாய்கள், சொக்ளேற்களில் உள்ள வண்ணங்களில் போன்சியாவ் 4 ஆர் என்ற இரசாயனப்பொருள் உள்ளது. இது திசுக்களை வீங்கச் செய்யும். புற்றுநோய், அலர்ஜி, ஆஸ்மா போன்றவை ஏற்பட இந்த இரசாயனப் பொருள்தான் காரணம்.

ஓர் உணவுப் பொருளில் ஒரு இரசாயனப் பொருள்தான் இருக்கும் என்று நினைக்க வேண்டாம். பிரியாணியில் 3 விதமான இரசாயனப் பொருட்கள் இருக்கின்றன. சொக்ளேற்றிலோ 4 வித இரசாயனப் பொருட்கள். இவற்றை உண்டால் ஒரே நேரத்தில் பல்வேறு பாதிப்புகள் நமக்கு ஏற்படக்கூடும்.

கலர் கலராய் உள்ள பொருட்களை தயாரிப்பவர்கள், விற்பவர்களுக்கு மக்களுடைய நலத்தைப் பற்றிக் கவலையில்லை. லாபம் கிடைத்தால் போதும். செயற்கை வண்ணங்கள் சேர்க்கப்படும் உணவுகளை நாம்தான் தவிர்க்க வேண்டும்.

முதலில் வீட்டில் செய்யப்படும் கேசரியில் கலரைக் கலக்காமல் தவிர்க்கலாமே!



# பரீட்சைக்கு முன்..

★ பிள்ளைகளை எப்போது பார்த்தாலும் "படிபடி" என்று பெற்றோர்கள் தொந்தரவு செய்யக் கூடாது. இதனால் குழந்தைகளுக்கு பதற்றம் ஏற்பட்டு ஞாபக சக்தி குறைந்து படிப்பது கெதியில் மறந்து போகும். எனவே உங்கள் குழந்தைகள் படிப்பதற்கு ஏற்ற அமைதியான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது பெற்றோர்களான உங்களது பொறுப்பு.

★ எல்லாவற்றையும் கடைசி நேரத்தில் படித்துக் கொள்ளலாம் என்ற மனப்பான்மை உங்கள் குழந்தைகளிடம் இருந்தால் அதனால் வரும் மன உளைச்சலை முன் கூட்டியே எடுத்துச் சொல்லி மாற்றுங்கள்.

★ பக்கத்து வீட்டு குழந்தையுடன் உங்கள் வீட்டுக் குழந்தையை ஒப்பிட்டுப் பேசவே பேசாதீர்கள். அத்தகைய பேச்சுகள் உங்கள் குழந்தைக்கு தாழ்வு மனப்பான்மையை உண்டாக்கிவிடும் என்பதை மறவாதீர்கள்.

★ உங்கள் குழந்தையை தட்டிக் கொடுத்து "உன்னாலும் நிச்சயம் நிறைய மார்க் வாங்க முடியும்" என்று பொசிற்றிவ்வான வார்த்தைகளை சொல்லித்தேற்றுவது பரீட்சை நேரத்தில் மிக முக்கியம்.

★ பிள்ளைகளை மணிக்கணக்கில் ஒரேயடியாக அமர்ந்து படிக்கச் சொல்லாதீர்கள். இதனால் படிக்கும் விஷயம் சரியாக மனதில் தங்காமல் போவதற்கு வாய்ப்பு அதிகம். எனவே அரைமணி நேரத்திற்கு ஒரு முறை கொஞ்சநேரம் டிவி பார்க்க அனுமதித்தோ கொஞ்சம் விளையாடிவிட்டுப் பிறகோ அவர்களைப் படிக்கச் சொல்லலாம்.

★ சில பிள்ளைகள் சில பாடங்களை கஷ்டமாக உணருவார்கள். முதலில் அவர்களுக்கு விருப்பமான பாடங்களை படிக்க வைத்துவிட்டு கஷ்டம் என நினைக்கும் பாடங்களைப் பிறகு தனியாக நேரம் ஒதுக்கி படிக்கச் சொல்லுங்கள். கஷ்டமான பாடங்களைத் தன்னம்பிக்கையோடு அணுக இது உதவும்.

★ பிள்ளைகளின் உயர் கல்வியை மனதில் வைத்துக் கொண்டு சில பெற்றோர்கள் "இவ்வளவு மதிப்பெண்கள் எடுத்தாக வேண்டும்" என்று கணக்குப் போட்டு பேசுவது கூடாது. "உன்னால் முடிந்தவரைக்கும் பரீட்சையை நன்றாக எழுது, மற்றதைப் பிறகு பார்க்கலாம்" என்று ஆறுதல் அளிக்கும் வார்த்தைகளை சொல்ல வேண்டும்.

★ உங்கள் பிள்ளைகள் சரியாகப் படிக்காமல் இருப்பதற்கு நண்பர்கள் வட்டத்தில் பிரச்சினை, ஆசிரியர்களின் கவனக்குறைவு அல்லது "படிபடி" என்று விரட்டிக் கொண்டே இருக்கும் உங்களிடம் உள்ள பயம்... இப்படி பல்வேறு காரணங்கள் இருக்கலாம். இதில் எதுவாக இருந்தாலும் அதை பிள்ளைகளிடம் பொறுமையாக காது கொடுத்துக் கேட்டு உடனே அந்த பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள்.

★ பரீட்சை நேரங்களில் கண்டபடி ரியூஷனுக்கு அனுப்பாமல் உங்கள் குழந்தைகளுக்கு மிகவும் தேவைப்படும் பாட விஷயங்களுக்கு மட்டும் ரியூஷனுக்கு அனுப்புங்கள். ரியூஷன் போய்விட்டு வீட்டிற்கு வந்தவுடன் உடனே மீண்டும் படிக்கச் சொல்லி இம்சிக்காதீர்கள்.

மேற்கூறிய யோசனைகளைப் பின்பற்றினாலே உங்கள் பிள்ளைகள் சுலபமாகப் பரீட்சையை எதிர்கொள்வார்கள்.

# நெடுங்கேணிப்பகுதியில் நடமாடும் சேவை

(வவுனியா)

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேச செயலக பிரிவில் நடமாடும் சேவையொன்று கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

நெடுங்கேணிப் பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தலைமையில் இடம்பெற்ற நீகழ்வில் இப் பிரதேசத்தில் தவற விடப்பட்ட உரிமை பத்திரங்களை இலவசமாகப் பெற்று கொடுப்பதற்கு இந் நடமாடும் சேஷவ ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந் நடமாடும் சேவையில் பிறப்புச்சான்றிதழ்,தேசிய அடையாள அட்டை, .கடவுச்சீட்டு திருமணச்சான்றிதழ் .இறப்புப் சான்றிதழ் பொலிஸ் பதிவுகள் போன்றன வவுனியா வடக்கு பிரதேச மக்களுக்கு இலவசமாகப் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 1000 இற்கு மேற்பட்ட மக்கள் பயன்பெற்றதாக பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தெரிவித்துள்ளார். (40)

# கல்விக்கான நிதி வழங்கல்



(யாழ்ப்பாணம்)

சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசமும் கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து சமாச அங்கத்தவர்களது பிள்ளைகளுக்கு வன்னிக்கல்வி மேம்பாட்டு சபையினால் (பல்கலைக்கழக மாணவர்களுக்கான) கல்வி நிதி உதவி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முள்ளியவளையில் இடம்பெற்றது, இதில் ஒவ்வொரு மாணவர்களுக்கும் தலா 10000 ரூபா வீதம் வழங்கப்பட்டது. இந் நிகழ்வுக்கு வன்னி மாவட்ட பிரதம இணைப்பாளர் சி.குணரட்ணம், சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசப் பொருளாளர் து.கு.சேவியர் மற்றும் பிராந்திய நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். (114)

# சவால்களுக்கு மத்தியில் சிறப்பாக இயங்கும் கிளி.பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம்

## சந்திரகுமார் எம்.பி. பாராட்டு



கிளிநொச்சி மாவட்ட பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி சங்கம் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தங்களது அங்கத்தவர்கள் பணியாளர்களின் நலன்கள் மற்றும் சமூக பொதுப் பணிகள் என்பனவற்றில் சிறப்பாக செயற்பட்டு வருகிறது என ஈ.பி.டி.பி யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பனை, தென்னைவள கூட்டுறவு அபிவிருத்தி சங்கங்களின் பேரிணைய கட்டட அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த புதன்கிழமை கூட்டுறவு வளாகம், 155 ஆம் கட்டை, ஏ9 வீதி எனும் இடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டிவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்:

யுத்த காலப் பகுதியில் பல சவால்களை எதிர்நோக்கிய கூட்டுறவு அமைப்புகள் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட இந்த அமைதியான சூழலின் பின்னர் கடுமையான போராட்டத்தின் மத்தியில் தமது சங்கங்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கு உழைத்து இன்று எம் முன்னே வளர்ந்துள்ளது இந்தச் சங்கங்களின் வளர்ச்சிப் படியின் இன்னுமொரு மைல் கல்லாக இன்று கிளிநொச்சி மாவட்ட பனை, தென்னைவள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கங்களின் பேரிணையம் உதயமாவதற்கான அடிக்கல் நாட்டப்படும் அதேவேளை இந்தக்கட்டடங்களை விரைவாக நிர்மாணித்து குறித்த சங்கங்கள் தங்களது தேவைகளையும், வியாபாரங்களையும் விஸ்தரிக்கக்கூடிய சூழல் உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

வடமாகாண பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையத் தலைவர் செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஈ.பி.டி.பியின் வட மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன், உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க மருத்துவப் பரிசோதனை

## மாற்று வலுவுள்ளோருக்கு வாய்ப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாற்று வலு உள்ளவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான மருத்துவ பரிசோதனை நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

முல்லைமாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் முல்லைமாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இம்மாவட்டத்தில் உள்ள மாற்று வலு உள்ளவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான இலங்கை மோட்டார் திணைக்களத்தினால் இவர்களுக்கான மருததுவ பரிசோதனைகளும் வாகனம் செலுத்தக்கூடிய மருத்துவ ஆய்வுகளும் இனங்காணப்பட்டு 100 பேருக்கான சாரதி அனுமதி வழங்குவதற்காக .தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# குடும்பநல உத்தியோகத்தர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சின் துணை மருத்துவத் துறையின் குடும்ப நல சேவை உத்தியோகத்தர்கள் பயிற்சிக்கான பயிலுநர்கள் ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

மேற்படி பயிற்சிகள் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் ஒன்றரை வருடங்கள் நடைபெறும் முழு நேர பயிற்சியாகையால் வேறு பயிற்சிகளுக்குச் செல்ல முடியாது.

கல்வித்தகைமையாக, க. பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் 18-30 வயதிற்குட்பட்ட பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம் உயரம் 4அடி 10 அங்குலமும் விவாகமாகாதவராகவும், பயிற்சியின் பின்னர் நியமிக்கப் படும் மாகாணத்தில் பத்து ஆண்டுகள் சேவை செய்தல் வேண்டும் உடல் உள தகுதியுடன் சுக தேகியாகவும், மூன்று ஆண்டுகள் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் வசிப்பவராகவும் இருத்தல் அவசியமாகும்.

விண்ணப்பங்கள் பணிப்பாளர் நிர்வாகம் 02 சுகாதார அமைச்சு, சுபசிரிபாய இல 385, வண பத்தேகம விமலவங்க தேரர் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு 15-04 2014 இற்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்புவதுடன் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் குடும்ப நல உத்தியோகத்தர் பயிற்சி நெறிக்கான ஆட்சேர்ப்பு 2014 எனக் குறிப்பிடல் வேண்டும். (105)

# வளலாய் அ.மி.த.க. பாடசாலையை மீள ஆரம்பிப்பது குறித்து ஆராய்வு

(அச்சுவேலி)

வளலாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையினை புனரமைத்து மீள இயங்க வைப்பதற்கான கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வளலாய் பொது நோக்கு மண்டபத்தில் பாடசாலை அபிவிருத்திச் சபைத் தலைவரின் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் மாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சின் அதிகாரிகள், உதவிக்கல்விப்பணிப்பாளர், வடமாகாணக்கல்வி அமைச்சர் குருகுலராஜா மாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இப்பாடசாலையினை மீள் பரிசீலனை செய்து கட்டுமானப்பணிகளை முன்னெடுக்கவேண்டும் என தலைவர் மற்றும் பாடசாலை பழையமாணவர்களும் கலந்துரையாடலுக்கு வருகை தந்தோரும் கேட்டுக் கொண்டனர்.

இந்நிலையில் மாகாணக்கல்வி! பணிப்பாளர், பாடசாலையின் காணி போதாமல் உள்ளதுடன் இப்பாடசாலைக்கு அருகாமையில் வேறு பாடசாலை ஒன்று இருப்பதனால் இதனை மீளப் புனரமைத்து இயங்கவைக்க முடியாது எனவும் தெரிவித்தார். எனினும் அவர் தெரிவித்த கருத்துக்களுக்கு பொதுமக்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து பாடசாலையினை மீள இயங்கவைக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்திக் கூறினார்கள்.

இந்நிலையில் இவ்வூரைச் சேர்ந்த 50 பெற்றோரின் கையொப்பத்தைப் பெற்றுத்தந்தால் பாடசாலையினை மீள இயங்கவைப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வோம் என அவர் தெரிவித்தார்.

மேலும் கல்வி அமைச்சர் குருகுலராஜா இதன் போது தெரிவிக்கையில்,

இப்பாடசாலையினை தற்காலிகமாக தரம் 1-3வரை வளலாய் பொது நோக்கு மண்டபத்தில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கையினை தாம் மேற்கொள்ளவுள்ளதாகவும் அதற்கான வளங்களினை மாகாணக்கல்விப்பணிப்பாளர் மூலம் வழங்க வேண்டும் எனவும் பழைய பாடசாலைக்கட்டடப் பணிகளை விரைவில் முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இதன்போது தெரிவித்தார். (85)

# பயிற்சிப்பட்டறை

ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆரம்பப்பிரிவு பயிற்சிப்பட்டறை நேற்று முன்தினம் ஆரம்பமானது.மன்னாரில் இடம்பெறும் இப்பயிற்சிப பட்டறைக்கு சுமார் 50 ஆசிரியர்கள் கலந்து கொண்டுள்ளனர். இப்பயிற்சி எதிர்வரும் செவ்வாய்க்கிழமைவரை இடம்பெறும். (114)





ADB இன் நிதியுதவியுடன் CARE திட்டத்தின் ஊடாக சிறப்பாக நடைமுறைப் படுத்தப்பட்ட வவுனிக்குள புனரமைப்பு வேலைத்திட்டத்தை காணலாம்.

# கிராமப்புற மாணவர்களை பெற்றோர் நகர பாடசாலைகளில் சேர்த்து வருகின்றனர்

## கோட்டக்கல்வி அதிகாரி கவலை

நகர்ப்புறப்பாடசாலைகளைப்போன்று கிராமப் புறப்பாடசாலைகளிலும் மாணவர்கள் பலதுறைகளிலும் சிறந்து விளங்கி வருகின்ற போதிலும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நகர்ப்புறப்பாடசாலைகளில் சேர்த்து வருகின்றனர். என 'பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி ச.ஸ்ரீராமச்சந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

கெருடாவில் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை இல்லமெய்வன்மைப்போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் அதிபர் எஸ். உதயரூபன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாகக் கலந்து பரிசில்களை வழங்கி வைத்து உரைநிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நகர்ப்புறப்பாடசாலைக்கு ஈடாக கிராமப்புறப் பாடசாலை மாணவர்கள் பலதுறைகளிலும் சிறந்து விளங்கி சாதனைகளை நிலைநாட்டிவருகின்றனர். ஆனாலும் கிராமப்புறப்பாடசாலைகளில் தத்தமது பிள்ளைகளை பெற்றோர்கள் கல்விகற்கவிடாது அயற் புறப்பாடசாலைகளுக்கு கொண்டுசென்று சேர்க்கின்றனர்.

இவ்வாறு கிராமப்புறப்பாடசாலையை சார்ந்துள்ளவர்கள் தம் பாடசாலை தன் பிள்ளையை அங்கே தான் சேர்க்கவேண்டும் என்ற பெருமையை இழந்து தலைதெறிக்க விட்டு பல சிரமங்களுக்கு மத்தியிலும் புறநகர்ப்பாடசாலைகளுக்கு பிள்ளைகளை கல்விக்காக அனுப்புகின்றனர். இந்நிலையை அனைவரும் ஒருங்கிணைந்து மாற்றவேண்டும். ஏனெனில் கிராமப்புறப்பாடசாலைகளில் வளப்பற்றாக்குறை காரணமாகவே பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நகர்ப்புறப்பாடசாலைகளில் கல்வி கற்க விடுகின்றனர். ஆனால் இதனைநம்மால் ஏற்க முடியாது தங்களுடைய பிள்ளைகளை இதே கிராமப்புறப்பாடசாலைகளில் கல்வி பயில வைப்பதன்மூலம் பெற்றோர்களுக்கானநேரம் மிச்சமடைகின்றது.

மாணவர்கள் பயமில்லாமல் ஆர்வத்துடன் சென்று கற்கின்ற சூழல் உருவாகும் இவ்வாறு கிராமப்புறப்பாடசாலைக்கு சென்று கல்வி கற்று உயர் கல்விக்காக வேறுபாடசாலைகளுக்குச்செல்லுமிடத்து பழைய மாணவர் என்ற பெயரோடு பெரு மையையும் நிலைநாட்டமுடியும் என்பதில் ஐய மில்லை என்றார்.

அத்துடன் கல்வி.கற்பதில் மட்டுமல்லாது மாணவர்கள் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் பங்கு பற்ற வேண்டும் அதுவும் கல்விப்பணிகளை முன்னெடுக்க வாய்ப்பாக அமையும் எனக்குறிப்பிட்டார்.

பருத்தித்துறை கோட்டத்துக்கு சில பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. அதுவும் வன்னியிலிருந்து தார்ப்பிரியமிக்க ஆசிரியர் குழாம் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். என்பதுடன் 6 மாத காலத்துக்குள் அவற்றை கிராமப்புறப்பாடசாலைகள் உள்ளடங்கலாக வலயக்கல்விப்பணிப்பாளரின் ஆலோசனைக்கமைவாகவும் ஆங்கில ஆசிரியர்களை நியமிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் கெருடாவில் இ.த.க.பாடசாலையே கஷ்டப் பிரதேச பாடசாலையாக இருந்து வந்துள்ள போதிலும் கடந்த 2012ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 3 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். 2013ஆம் ஆண்டு 2 மாணவர்கள் சித்தியடைந்து 7 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

இப்பாடசாலையை பொறுத்தமட்டில் தாம் பாராட்டுவதாகவும் மேலும் பல மாணவர்கள் சித்தியடைந்து பெற்றோர் தம்பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளுக்கு ஏதுவான வாய்ப்புகளை ஏற்படுத்தி கொள்வதற்கும் உந்து சக்தியாக அமைவர் என அவர் மேலும் தெரிவித்தார். (116)

## புகைப்பொருள் விற்பனையை நிறுத்த வர்த்தகர்கள் தீர்மானம்

வரணிப்பிரதேசத்தில் உள்ள வர்த்தகர்கள் இனி வரும் நாட்களில் புகைத்தலுடன் சம்பந்தப்பட்ட சிகரெட்,பீடி, சுறுட்டு, போன்ற பொருட்களை எதிர்காலத்தில் மக்களின் நன்மை கருதி விற்பனை செய்வதை முற்றாக நிறுத்த உள்ளதாக தெரிவித்துள்ளனர். ஏற்கனவே ஒரு சில வர்த்தகர்கள் புகைத்தல் பொருட்களை விற்பனை செய்வதை நிறுத்தியுள்ளனர். அதேபோன்ற தாமும் இப்பொருள்கள் விற்பதை தடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க உள்ளமை வரவேற்கத் தக்க விடயமாகும் என பொதுமக்கள் சிலர் கருத்து தெரிவிக்கின்றனர். (150)

# விளையாட்டு மைதானத்துக்கு 2 பரப்புக்காணி அன்பளிப்பு

யாழ். ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை பழைய மாணவனும் லண்டன் பழைய மாணவர் அமைப்பைச் சேர்ந்தவருமான சிவலிங்கம் சிவநாதன் 2 பரப்புக்காணியை பாடசாலை விளையாட்டு மைதானத்துக்கு என அன்பளிப்புச் செய்துள்ளதாக பாடசாலை அதிபர் ந.நரேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஏழாலை தெற்கு அமெரிக்கன்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் இல்லாத நிலையில் கடந்த பல வருடங்களாகத் தனியாருக்குச் சொந்தமான காணியொன்றிலேயே விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்று வந்தன.

தரம் ஒன்று முதல் 5 வரையான மாணவர்கள் கல்வி பயிலும் குறித்த பாடசாலைக்குச் சொந்தமாக மைதானம் இல்லாமலிருந்தமை இதுவரை காலமும் பெருங்குறைபாடாக இருந்து வந்தது. இந் நிலையில் லண்டன் பழைய மாணவர் அமைப்பைச் சேர்ந்த சிவலிங்கம் சிவகாந்தனின் தனிப்பட்ட நிதியுதவி மூலம் 02 பரப்புக் காணியை கொள்வனவு செய்து அண்மையில் பாடசாலைக்கென வழங்கியுள்ளார்.

தமது விளையாட்டுத் திறமைகளை வெளிப்படுத்தச் சொந்தக் காணி கிடைத்திருப்பது தொடர்பில் குறித்த பாடசாலையின் மாணவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளதுடன் அதிபர் ந.நரேந்திரன் தமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துள்ளார். (48)

## சைவசமய பரிசளிப்பு நிகழ்வு



தென்மராட்சி கல்வி வலயம் நடாத்திய 2014 ஆம் ஆண்டிற்கான சைவசமய பரிசில் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கடந்த 8ஆம் திகதி நடைபெற்றது.

சைவ சமய ஆசிரிய ஆலோசகர் இ.இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பசுபதி அரியரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.சிவநாதன், ஓய்வு நிலை அதிபர் த.கந்தையா, ஓய்வு நிலை அதிபர் சா.நகுலேஸ்வரன், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் ல.முகுந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, உஷன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களின் நடனம், மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய மாணவர்களின் நடனம், கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய ஆசிரியர்களின் வில்லுப்பாட்டு ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன. தொடர்ந்து சைவசமயப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் விருந்தினர்களால் வழங்கப்பட்டன. (48)

## நிர்வாகசபை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் புனித அன்னாள் ஆலய அருட்பணிசபையின் புதிய உறுப்பினர்களுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு,இன்று காலை 6.15 மணியளவில் திருப்பலி அருட்தந்தை ஜேம்ஸ் அடிகளார் தலைமையில் இடம் பெறவுள்ளது, பழைய நிர்வாக சபை கலைக்கப்பட்டு புதிய நிர்வாக சபை அண்மையில் தெரியப்பட்டது,இதனடிப்படையில் இன்றைய தினம் புதிய உறுப்பினர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்பர். (114)

## பதிவிறக்கப் பெட்டகம்

"போர் வராமல் எப்படித் தடுக்கிறார் நம் மன்னர்?"
"வேற எப்படி? வெட்கம், மானம், ரோஷம், சூடு, சுரணை எல்லாத்தையும் அடகு வைச்சுத்தான்!"

*** *** *** ***

**அமைச்சர்:** மன்னா... எதிரிநாட்டு வீரர்கள் நம்முடன் போர் புரிய நெருங்கிவிட்டார்கள்....
**மன்னன்:** எல்லோரும் பாம்பு... பாம்பு...என்று கத்துங்கள்...
**அமைச்சர்:** ஏன் மன்னா..?
**மன்னன்:** பாம்பென்றால் படையும் நடுங்கும் என்று உமக்குத் தெரியாதா?

*** *** *** ***

"என்னைப் புகழ்ந்து பாட்டெழுதிவரும் புலவர்கள் எல்லோரும் வறுமையிலேயே உள்ளார்களே...என்ன காரணம் அமைச்சரே?"
"இலக்கியத்துக்கு அவர்கள் செய்யும் பாவமும் துரோகமும் தான் மன்னா!"

*** *** *** ***

"மன்னா நம்ம குதிரையும் உங்களை மாதிரிதான்"
"என்ன சொல்கிறீர்?"
"போருக்குச் செல்லும்போது மெதுவாகச் செல்கிறது. வரும்போது வேகமாக வருகிறது"

*** *** *** ***

"இளவரசர் போர்ப் பயிற்சிக்கு நல்லா தயாராகிட்டார் மன்னா?"
"எப்படிச் சொல்கிறீர்?"
"எல்லா ஓட்டப் பந்தயத்திலேயும் முதலாவதா வருகிறாரே!"

*** *** *** ***

"மன்னர் போதையில் இருக்கிறார் என்று எப்படிக் கண்டு கொண்டாய்?"
"எதிரி மன்னன் உங்களுடைய அத்தியாயத்தை விரைவில் முடிக்கப் போவதாகக் கூறுகிறார்" என்று சொன்னால், 'அவன் என்னை வைத்து கதை கூட எழுதுகிறானா?' – என்று கேட்கிறார்!"

*** *** *** ***

"மன்னர் ஏன் கோபமா இருக்கிறார்?"
"மன்னர், போரிலிருந்து ஓடி வந்தபோது, வீடியோ எடுத்து, கிராபிக்ஸ் பண்ணி, செருப்புக் கம்பெனி விளம்பரமாக சீரியல்களிடையே ஒளிபரப்பாகிறதாம்"

*** *** *** ***

மன்னர் ஏன் பயங்கர டென்ஷன்ல இருக்கிறார்..?
"கண்ணா, புறமுதுகிட்டு ஓட ஆசையா?' என்று எதிரி நாட்டு மன்னன் எஸ்.எம்.எஸ். அனுப்பியிருக்கிறானாம்...

*** *** *** ***

**மந்திரி:** மன்னா, நீங்கள் போர்க்களத்தின் மண்ணையே மிதித்ததில்லை என்று எதிரி சொல்கிறானே..?
**மன்னர்:** அவனுக்கென்ன தெரியும்? நான் பலமுறை கவ்வியே இருக்கிறேன் என்பது...

*** *** *** ***

"மந்திரியாரே, போர் அதிக நாள் நீடிக்கும் என்று நினைக்கிறேன்"
"அதுக்கு இப்ப என்ன செய்ய வேண்டும் அரசே"
"பதுங்கு குழிகள் எல்லாத்திலயும், கடலை அல்வா, இனிப்பு, முறுக்கு, சீடை எல்லாம் போதிய அளவுக்கு நிரப்பி வைச்சிடணும்"

*** *** *** ***

"நாடகத்தில கர்ணனாக வேஷம் போட்டவர் மேடையிலேயே தூங்கிவிட்டார்"
"பிறகு?"
"அவரைக் கும்பகர்ணனாக காட்டிவிட்டார்கள்"

*** *** *** ***

"போரில் மயங்கி விழுந்துவிட்டாராமே மன்னர்!"
"மண்ணாங்கட்டி...அப்படி நடிச்சு, தப்பிச்சு ஓடி வந்திருக்கிறார் அவ்வளவுதான்!"

*** *** *** ***

"மன்னரின் யோசனைகளும் உத்தரவுகளும் மகா கோமாளித்தனமாக இருக்கிறது"
"ஏன்?"
"மின் பிரச்சினைகளை சமாளிக்க பக்கத்து நாட்டிலுள்ள மின் கம்பங்களையெல்லாம் கைப்பற்றச் சொல்கிறார்!"

*** *** *** ***

"மன்னர் ஏன் புலவரைக் கசையால் அடிக்கிறார்?"
"கஜானா காலி என்று மன்னர் கூறினதுக்கு "கஜானாவும் உங்கள் தலையும் ஒன்றுதான்' என்று கூறினாராம் புலவர்"

*** *** *** ***

**கேள்வி:** மாவீரன் நெப்போலியன் எந்தப் போரில் இறந்தார்?
**பதில்:** அவரது கடைசிப் போரில்...

# அமெரிக்க முதலீடுகளுக்கு அரசு மீண்டும் பச்சைக்கொடி

(கொழும்பு)

மொத்தமாக 3.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான அமெரிக்காவின் முதலீடுகளை இலங்கை அரசாங்கம் கடந்த வருடத்தில் அனுமதியளித்திருந்தது. இதில் 1.3 அமெரிக்காவின் பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான முதலீடுகள் உள்நாட்டு முதலீட்டாளர்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கடந்த அண்டு 2.3 பில்லியன் பெறுமதியான அமெரிக்க டொலர்களுக்கான முதலீடுகள் வெளிநாட்டவர்களிடமிருந்து பெறப்பட்டிருந்ததுடன், 1.3 பில்லியன் பெறுமதியான அமெரிக்க டொலர்களுக்கான முதலீடுகள் உள்நாட்டு முதலீட்டாளர்களிடமிருந்தும் பெறப்பட்டிருந்தது என இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் லக்ஷ்மன் ஜயவீர தெரிவித்திருந்தார்.

பெரும்பாலான முதலீடுகள் உட்கட்டமைப்பு, சுற்றுலா மற்றும் நிர்மாணத்துறைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த ஆண்டில் இரண்டு பில்லியனுக்கும் அதிகமான வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கும் என தாம் எதிர்பார்க்கிறோம் என அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

# மண்டைதீவிற்கு வடக்கின் வசந்தம் இலவச மின் இணைப்பு வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதிக்கு வடக்கின வசந்தம் திட்டத்தின் கீழ் இலவச மின்னிணைப்பு இலங்கை மின்சார சபையினரால் வழங்கப்பட்டு வருகின்றது.

மண்டைதீவுப் பகுதியில் இந்திய வீட்டுத் திட்டம் மற்றும் உலக வங்கியின் வீட்டுத் திட்டத்தின் மூலமாக வீடுகளை நிர்மாணித்த பயனாளிகளுக்கே இவ்வாறு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கிழ் இலவச மின்னிணைப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

யுத்த சூழ்நிலைகள் காரணமாக இந்தக் கிராமத்திற்கு தடைப்பட்டிருந்த மின்சார விநியோகம் கடந்த ஆண்டே இலங்கை மின்சார சபையினரால் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே இந்தக் கிராமத்தில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு இந்திய மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் வீட்டுத் திட்டங்களின் மூலமாக வீடுகளை நிர்மாணித்த பயனாளிகள் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவச மின்னிணைப்பைப் பெறுவதற்காக இலங்கை மின்சார சபைக்கு விண்ணப்பித்தனர்

இவர்களுக்கே தற்சமயம் இலவச மின்னிணைப்பு வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிககப்படுகிறது. (பா)

# ஜெனிவா பிரேரணை நிறைவேறினால் நாட்டின் பொருளாதாரம் சரியும்

## இது ஜே.வி.பி. தலைவரின் கணிப்பு



(கொழும்பு)

வரலாறு காணாத அளவிற்கு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என ஜே.வி.பி. யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதாக அரசு கூறுகிறது அதிசயமான வளர்ச்சி இது வர்த்தகர்களுக்கு வியாபாரம் இல்லை ஆனால் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளது,

நாட்டின் கல்வி வீழ்ச்சியடைந்துள்ளது சுகாதார சேவை பாதிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திடம் இப்போது பணமில்லை.

எல்லா விடயங்களுக்கும் வரியை அறவீடு செய்து அதன் மூலம் ஆட்சி நடாத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது.

மத்திய கிழக்கு நாடுகளில் பத்து ஆண்டுகளுக்கு முன்னதாக ரொட்டியின் விலை எவ்வாறு இருநததோ அதே நிலைமை காணப்படுகின்றது.

எனினும், இலங்கையில் எல்லா பொருட்களின் விலைகளும் உயர்த்தப்பட்டுள்ளன.

ஒரு கிலோ பால் இறக்குமதி செய்யும் போது விலை 350 ரூபா, அதற்கான வரி 400 ரூபாவாகும்.

வரி அறவீடுகளுக்கு மேலதிகமாக அபராதங்களும் விதிக்கப்படுகின்றன.

இன்று இவ்வளவு ரூபா அபராதம் விதிக்க வேண்டுமென உத்தரவிட்டே பொலிஸார் வீதிகளில் இறக்கப்படுகின்றனர் என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜெனிவா யோசனை இலங்கையின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் வங்கியாளர்கள்

ஜெனிவாவில் முன்வைக்கப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான யோசனை, இலங்கையின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று பல்வேறு தரப்பினரும் தெரிவித்து வருகின்றனர். என்றும் ஜே.வி.பி. தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இலங்கையின் பொருளாதாரத் துறையினர முன்னணியாளர்களின் கருத்துக்கள், பெரும்பாலும் ஜெனிவாவின் யோசனை இலங்கையின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றே அமைந்துள்ளன.

சம்பத் வங்கியின் தலைவர் தம்மிக்க பெரேரா- ஜெனிவா தீர்மானம் எவ்வாறு அமைந்திருந்தாலும் இலங்கையில் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள அமைதி சூழ்நிலை, வர்த்தகத்துறைக்கும் வியாபிக்கப்பட்டு தொழில் வாய்ப்புக்களும் புதிய தொழில்களும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதன்போதே இலங்கையில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தமுடியும். அதேநேரம் எந்த ஒரு சவாலையும் சமாளிக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை லாப் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் கே எச் வேகப்பிட்டிய, ஜெனிவா பிரேரணையின் வெளிப்பாட்டினால் இலங்கையின் பொருளாதாரத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரத் தடை என்ற விடயம் இலங்கைக்கு ஏற்படுத்தப்படமாட்டாது என்ற உறுதி மொழியை இங்கு காரணமாகக் கூறமுடியும் என்று வேகப்பிட்டிய கூறியுள்ளார்.

சொப்லொஜிக் குழுமத்தின் தலைவர, அசோக் பத்திரகே- இலங்கையில் சிறுபான்மையினருக்கு சம வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு அவர்களுக்கும் பொருளாதாரத்துறையில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுள்ளார்.

இலங்கையை பொறுத்தவரையில் அதன் பொருளாதார மேம்பாட்டுக்கு அனைத்து நாடுகளின் உதவிகளும் அவசியமானது என்றும் பத்திரகே குறிப்பட்டுள்ளார். தேசிய அபிவிருத்தி வங்கியின் தலைமையாளர் ராஜேந்திரன் தேவராஜா- இலங்கையை பொறுத்தவரையில் ஜெனிவா பிரேரணை நிறைவேற்றம் இலங்கையின் பொருளாதாரத்தில் செல்வாக்கை செலுத்தும்.

எனினும் இலங்கையில் உற்பத்தி மற்றும் முதலீட்டாளர்கள் தொடர்பில் அதீத செயற்பாடுகள் அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# ஜெனிவாவில் அமெரிக்க பிரேரணை தோல்வியைத் தழுவ வேண்டும்

## பிரார்த்தனை செய்யக் கோருகிறார் பிரதி அமைச்சர் அப்துல் காதர்

இலங்கைக்கு தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட ஐந்து நாடுகளினால் ஜெனிவாவில் கொண்டு வரப்படவுள்ள பிரேரணை தோற்கடிக்கப்பட வேண்டுமென அனைத்துப் பள்ளிவாசல்களிலும் முஸ்லிம் மக்கள் 'துஆ' பிரார்த்தனை மேற்கொள்ள வேண்டுமென சுற்றாடல்துறை பிரதியமைச்சர் ஏ.ஆர். எம். அப்துல் காதர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

பிரதியமைச்சர் அப்துல் காதர் ஜெனிவா மாநாடு தொடர்பாக முஸ்லிம்களுக்காக விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

முஸ்லிம்கள் அதிகாரத்திலுள்ள அரசுக்கும் நாட்டின் தலைவருக்கும் விசுவாசமாக இருக்க வேண்டுமென்று புனித குர்ஆன் கூறுகிறது. எனவே நாட்டில் இனரீதியான பிரிவுகளுக்கும் பிளவுகளுக்கும் முஸ்லிம்கள் காரணமாக இருக்கக் கூடாது. நாமனைவரும் இலங்கையர் என்ற பொதுவான அடிப்படையில் நாட்டுக்கு எதிராக சர்வதேசத்திலும் உள்நாட்டிலும் மேற்கொள்ளப்படும் சதித்திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள பிரேரணைக்கு முஸ்லிம் நாடுகள் ஆதரவளிக்கக்கூடாது. அரசாங்கத்துக்கே ஆதரவளிக்க வேண்டும் என சில முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களிடமும் நான் கோரிக்கை விடுத்துள்ளேன். முஸ்லிம்கள் நாட்டைப் பாதுகாப்பவர்களாக இருக்க வேண்டுமென்றே அன்றி காட்டிக்கொடுப்பவர்களாக இருக்கக் கூடாது.

எதிர்வரும் மேல் மற்றும் தென்மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம்கள் அரசுக்கு ஆதரவளிப்பவர்களாக, வாக்களிப்பவர்களாக இருப்பார்கள் என்பதில சந்தேகமில்லை. தற்போது 85 சதவீதமான முஸ்லிம்கள் அரசுக்கு ஆதரவானவர்களாகவே இருக்கிறார்கள்.

அரசாங்கத்துடன் இருக்கும் ஏனைய முஸ்லிம் கட்சிகளும் கூடி இருந்து குழி தோண்டக் கூடாது. முப்பது வருட கால யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்பு சகல துறைகளிலும் இலங்கை அபிவிருத்தியை நோக்கிச் செல்வதை மக்கள் அறிவார்கள். பாதை உட்பட உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி நாட்டு மக்களை மாத்திரமல்ல வெளிநாட்டு உல்லாச பயணிகளைக்கூட திகைக்க வைத்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.



**பருத்தித்துறை இன்பர் சிட்டி கடற்கரைப் பகுதியில் நேற்று இறந்த நிலையில் பெரிய திமிங்கிலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. இதனைப் பெருமளவான மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். (85)**

# பழம்பெரும் ஆலயத்துக்கு சிறப்பான மஹாகும்பாபிஷேகம்

நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலயத்தின் புனருராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்தை மிக நேர்த்தியாகவும் சிறப்பாகவும் உரிய காலத்தில் நிறைவேற்றியமையை வலி.தென்மேற்கு பொது அமைப்புக்கள் பாராட்டியுள்ளன.

இயற்கை பிட்டியுடன் அமைந்ததும் இருநூற்றி ஐம்பது வருட காலத்தை பழமையாக கொண்டது நவாலிகளையோடை கண்ணகை அம்மன் ஆலயம் ஆகும்.

இந்த ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகத்தை தனித்துவமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டில் உள்ள அம்மனின் அடியார்களிடம் இருந்து பெற்ற நிதிப் பங்களிப்பை கொண்டே நூற்றாண்டு பழமை வாய்ந்த ஆலயம் மீள்புனரமைப்புச் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிறைவு பெற்றுள்ளது. (92)

# சந்திரிக்காவின் கடிதம் எனக்கு கிடைக்கவில்லை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, தமக்கு எந்தவிதமான கடிதங்களையும் அனுப்பி வைக்கவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தம்மை சந்திப்பதற்காக நேரத்தை ஒதுக்குமாறு கோரியதாக சந்திரிக்கா ஊடகங்களில் தெரிவித்த போதிலும், அவ்வாறான கடிதம் எதுவும் கிடைக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அலரி மாளிகையில் அமைச்சர்கள் சிலருடன் நடாத்திய சந்திப பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதியை சந்திக்க ஆர்வமாக இருககின்றேன் என தெரிவித்து சந்திரிக்கா கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

- 21ஆம் 22ஆம் வினாக்கள் பின்வரும் வரிப்படத்தை அடிப்படையாக கொண்டவை இவ்வரிப்படத்திலே சதுரத் துண்டுகள் எண்கோலத்திற்கு அமைய வைக்கப்பட்டுள்ளன. இக்கோலத்தை பரிசீலித்து A,B எனும் வெற்றிடங்களுக்கு பொருத்தமான திருத்தமான துண்டை இனங்காண்க.




21) வெற்றிடம் A யிற்குத் திருத்தமான துண்டு எது? (i) (ii) (iii)



22) வெற்றிடம் B யிற்குத் திருத்தமான துண்டு எது? (i) (i) (iii)



- தரப்பட்டுள்ள பிரசினங்களை விளங்கிக்கொண்டு 23ஆம் வினாவிற்கான (?) அடையாளத்தின் பெறுமானத்தையும், 24ஆம் வினாவிற்கான அடையாளத்தையும் காண்க.

23)




(i) 9 (ii) 7 (iii) 8

24)




(i) (ii) (iii)



## கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை வெளியான பயிற்சி வினாக்களின் விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 3 | 11) | 2 | 21) | 2 | 31) | நாக்கு , குடம் |
| 2) | 2 | 12) | 2 | 22) | 1 | 32) | 2 |
| 3) | 2 | 13) | 3 | 23) | 10.50 | 33) | 1 |
| 4) | 2 | 14) | 2 | 24) | 1 | 34) | 1 |
| 5) | 1 | 15) | 2 | 25) | 1 | 35) | 2 |
| 6) | 2 | 16) | 3 | 26) | 1 | 36) | 3 |
| 7) | 3 | 17) | 1 | 27) | 2 | 37) | 1 |
| 8) | 3 | 18) | 1775 g | 28) | தாதி | 38) | 2 |
| 9) | 3 | 19) | 1 | 29) | சந்தோஷம் | 39) | Q |
| 10) | 2 | 20) | 3 | 30) | நான்கு , குளம் | 40) | R |



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
1 மணி 15 நிமி



# கல்வி முரசு



01) இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



(A) (B) (C) (D) (E) (F)

இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(i) A, F / B, D / C, E (ii) A, E / C, F / B, D (iii) B, C / D, F / A,F

02) இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ளவற்றை மூன்று கூட்டங்களாக பிரிக்கலாம்



A B C D E F

இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(i) E, B / A,F / D, C (ii) F, D / C, A / E, B (iii) A, C / B, D / E,F

03) இந்த உருவைப் பூரணப்படுத்துவதற்கு கீழே தரப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து பயன்படுத்தக்கூடிய பகுதியைத் தெரிவு செய்க.



(i) (ii) (iii)

04) ? குறியினால் காட்டப்பட்டுள்ள சதுரத்தினுள் வரவேண்டிய மிகச் சரியான கோலத்தை i,ii,iii ஆகிய உருவங்களில் இருந்து தெரிவு செய்க.




(i) (ii) (iii)



பொருத்தமான பெறுமானத்தை தெரிவு செய்க.

05)




(i) 12 (ii) 24 (iii) 17

06)




(I) 03 (ii) 05 (iii) 07

● 07ஆம், 08ஆம் வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

07) பொழுது புலர்ந்ததும் நிச்சயமாக நடக்கக்கூடியது எது?
(i) தெரு விளக்குகள் அணைதல்
(ii) தூக்கத்தில் இருப்போர் தூக்கம் விட்டு எழும்புதல்
(iii) மெல்ல மெல்ல வெளிச்சம் பரவுதல் ..................

08) விளையாடிக்கொண்டிருக்கும் வீரன் ஒருவனுக்கு நிச்சயமாக நடக்கக்கூடியது
(i) வியர்வை வெளியேறல் (ii) இடறி விழுதல் (iii) மகிழ்ச்சி ஏற்படல் ..................

● 09-12 வரையிலான வினாக்களுக்கு தரப்படும் இரகசிய குறியீட்டில் எழுதப்பட்டுள்ள மூன்று சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. சொல்லிலுள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு குறியீட்டின் மூலம் காட்டப்பட்டிருப்பினும் குறியீடுகள் சொல்லிலுள்ள எழுத்துக்களின் ஒழுங்கில் காட்டப்படவில்லை

| சொல் | ஒழுங்கு மாறியுள்ள இரகசிய குறியீடு |
|---|---|
| தங்கம் | X + △ ∟ |
| கதிரை | / ∟ ⊥ |
| தட்டு | ⊖ △ ○ |

இதன்படி கீழுள்ள எழுத்துக்களுக்கு உரிய குறியீட்டைத் தெரிந்து அதன் கீழ்க்கீறிடுக.

09) த (i) △ (ii) / (iii) ○
10) க (i) ⊥ (ii) + (iii) ∟
11) ரை (i) ○ (ii) ⊥ (iii) +
12) டு (i) △ (ii) ∟ (iii) ○



● 13ஆம் 14ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள பழ மொழிகளின் கருத்தை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவு செய்க.

13) அடிநாக்கில் நஞ்சும், நுனி நாக்கில் அமிர்தமும்
(i) சிலர் உள் ஒன்றுவைத்துப்புறம் ஒன்று பேசுதல்
(ii) சிலர் விடயப் புலமையின்றி வேறொன்றைக் குறைகூறுதல்
(iii) சிலர் தகுதிக்குமேல் எண்ணுதல் ..................

14) அவனின்றி அணுவும் அசையாது
(i) இறைவனின் மகிமை
(ii) மனிதனின் அறிவு
(iii) மனிதனின் திறமை ..................

● 15ஆம் 16ஆம் வினாக்களில் பிழையான கருத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

15) (i) வாய்பேச முடியாதவர்களுக்கு சைகை மொழி உதவுகிறது
(ii) உடல் வெப்பநிலையை உடல் வெப்பமானி பாகை செல்சியசில் அளவிடுகிறது
(iii) சுதந்திர இலங்கையில் முதலாவது ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன

16) (i) சிவப்பு + மஞ்சல் + நீலம் போன்ற நிறங்களை கலப்பதன் மூலம் கறுப்பு நிறம் பெறப்படும்
(ii) சங்கிலித்தையல் ஆடைகளில் அலங்கார வேலைப்பாடுகளைச் செய்வதற்கு உகந்த முறை
(iii) பாதசாரிகள் கடவையை கடக்கும் முன்பு முதலில் இடம் பக்கமும், பின்வலப்பக்கமும், மீண்டும் இடப்பக்கமும் பார்த்து வீதியை கடக்கவேண்டும்.

● 17ஆம் 18ஆம் வினாக்களுக்கு முப்பரிமான உருவத்தை மேலிருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் எது

17) 


18) 


● கீழே சில தகவல்கள் தரப்படுகின்றன அவற்றுக்கேற்ப 19ஆம், 20ஆம் வினாக்களுக்கு விடை தருக.

19) மாணவர்கள் A தரம் 1 மாணவர்கள் B தரம் 3 மாணவர்கள் C




20) மட்டக்களப்பு A கிழக்கு மாகாணம் B இலங்கை C







மண்டைதீவு பிரதான வீதி நீண்ட காலத்திற்குப் பின்னர் தற்போது புனரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருவதைக் காணலாம்.

(படங்கள்- பா.பார்த்தீபன்)

# கலைஞர்களை ஊக்குவிப்பதன் மூலம் கலைகளை பாதுகாக்க முடியும்

## உதவிக் கல்விப் பணிப்பாளர் புஸ்பலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது பாரம்பரிய கலைகளை அழியவிடாது அவற்றை பாதுகாப்பதற்கு கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டும்.

கலைகஞர்களை கௌரவித்து அவர்களை ஊக்குவிப்பதன் மூலம் கலைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முடியும். இதற்கு அரசாங்கம்.நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என வடமாகாணகல்வி அமைச்சின் நிர்வாக உதவிக் கல்விப்பணிக்காளர சி.புஸ்பலிங்கம் தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு கலாபூசணம் விருது பெற்று பருத்தித்துறைப் பிரதேசத்துக்கு பெருமை சேர்த்த கலைஞர்களுக்கான கௌரவிப்பு விழா அண்மையில் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இ.த ஜெயச்லன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

கலைஞர்கள் எனப்படுபவர்கள் கலைத்துறை ஒன்றில் ஈடுபாடு கொண்டவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் வயது எல்லையின்றி தொடர்ந்தும் பயணிப்பார்கள். அவர்களை கலையும ஒட்டிக்கொள்ளும் அந்த வகையில் 2013 ஆம் ஆண்டு கலைஞர்களுக்கான கலாபூசண விருதில் தமிழர்களில் 70 கலைஞர்களுக்கே வழங்கப்பட்டு அதிலும் பருத்தித்துறைப் பிரதேசத்தில் 4 கலைஞர்களுக்கே வழங்கப்பட்டுள்ளதுடன் இனிவரும் காலங்களில் அதிகளவான கலைஞர்கள் இவ்வாறு பல விருதினை எமது பிரதேத்திலிருந்து பெறுவார்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை. அத்தோடு கலைகளை வளர்ப்பதற்கான நம்பிக்கையும் எங்கள் மத்தியில் இருக்கும் தமிழ் மரபில் 64 கலைகள் இருப்பினும் எங்களுடய பிரதேசத்தில் வரையறைக்குட்பட்ட இசை, நடனம், 'சிற்பம், ஓவியம் போன்றகலைகளோடு மல்யுத்தம் வில்வித்தை போன்ற கலைகள் உள்ளடங்கலாகவே எமது கலைஞர்களினால் பேணபட்டு வருகின்ற நிலையிலும் முழுக் கலைஞர்களும் பங்களிக்கின்றார்களா என்ற கேள்வியும் எம்மவர்களிடையே எழுகின்றது.

கலைகளை சிறுவயதிலிருந்து வளர்த்தெடுப்பதன் மூலம் எமது பண்டைய வரலாறுகளையும் அறிந்து கொள்ளமுடிகின்றது. அதிலும் பாடசாலை சமூகதினருக்கு தேவையாகும் .

கல்வி அமைச்சினால் வெளியிடப்படும் இலவசப் பாட நூல்களில் கூடவே பண்டைய வரலாறுகள் ஆங்கில மொழி மூலத்தில் ஒரு வரலாறு தமிழ் மொழி மூலத்தில் இன்னொரு வரலாறுமாக திரிவுபடுத் தப்பட்டுள்ளதைக் காணகூடியதாகவுள்ளது. ஆகவே எம்முடைய உண்மையான வரலாறுகள் அறிய வேண்டுமாக இருந்தால் கலைஞர்களுடைய பங்களிப்பு தேவையாக உள்ளது என்றார் (116)

# நூல் வெளியீட்டு விழா

(அச்சுவேலி)

தர்மலிங்கம் பரராசசிங்கத்தின் புகழ்பூத்த நீர்வேலி நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை மண்டபததில இ.குணநாதன் (தலைவர் நீர்வேலி கலை பண்பாட்டுக் கழகம், பிரதிக் கல்விப் பணிப் பாளர் தீவகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தநிகழ்வில் வரவேற்புரையினை சி.தர்மரத்தினம் (தலைவர்- விழாக்குழு அதிபர் றோ.க.த.க பாடசாலை) மற்றும் ஆசியுரையினை சிவஸ்ரீ ஆ.சந்திர சேகரக் குருக்கள், சிவஸ்ரீ கு.தியாக ராஜக் குருக்கள், சிவ ஸ்ரீ. சா.சோம தேவக் குருக்கள், சிவ ஸ்ரீ இ. சுவாமிநாதக் குருவண பிதா ஆயூட்நிக்சன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (85)

செல்வகுமாரின் ஊசல் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 23 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக் யாழ்தியாகி அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமர்காண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராசா கலந்துகொள்ளவுள்ளார்.

இந் நிகழ்வில் வரவேற்புரையை யாழ்.மருத்துவ பீட பதிவாளர் சர்வேஸ்வரா, ஆசியுரையை மூத்த எழுத்தாளர் சிற்பி சரவணபவன் எழுத்தாளர் கோப்பாய் சிவம் வெளியீட்டுரையை ஆய்வாளர் நிலாந்தன், சிறப்புரையை பேராசிரியர் எஸ்சிவலிங்கராஜா ஆய்வுரையை சட்டத்தரணி ராஜகுலேந்திரன் ஐ.சாந்தன், ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# யாழ்.மரியன்னை தேவாலயத்தில் மழை வேண்டி பிரார்த்தனை

மழை வேண்டி சமய பிரார்த்தனைகளை யாழ்.செயலகம் மேற்கொள்ளவுள்ளது.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை காலை யாழ்மரியன்னை தேவாலயத்தில் காலை 6 மணியிலிருந்து காலை 7.30 மணிவரை விசேட ஆராத னைகள் இடம்பெறவுள்ளதுடன் மு.ப 10.30 மணிக்கு யாழ்.பெருமாள்கோவிலும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொது நிர்வாக அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைய இவ் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

# கொடிகாமம் ஆயுர்வேத வைத்தியசாலை திறப்பு



(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை கடந்த வியாழக்கிழமை பிப 2.00 மணிக்கு வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சர் வைத்திய கலாநிதி ப. சத்தியலிங்கத்தால் திறந்துவைக்கப்பட்டது.

இக் கட்டடம் திருமதி. மங்கயற்கரசி சுப்பிரமணியத்தால் ஏ 9 பிரதானவீதியில் கொடிகாமம் சந்திக்கு அருகாமையில் அன்பளிப்புச் செய்யப்பட்ட 16 பரப்பு காணியில் 2012 ஆம் ஆண்டிற்கான குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 10 மில்லியன் ரூபா செலவில் நிர்மா ணிக்கப்பட்டது.

இவ் வைத்தியசாலை மருத்துவ பொறுப்பதிகாரியான வைத்தியகலாநிதி எஸ் கனகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் மு. சயந்தன், வடமாகாண சபை உறுப்பினர் க. சர்வேஸ்வரன், சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர் சி. துரைராஜா, சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன், சுதேசமருத்துவத் திணைக்கள ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி சி. துரைரட்ணம், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன் ஆகியோர் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

# பங்குனி உத்தரம்

(குருநகர்)

நாகேஸ்வரம், அளவெட்டி மேற்கு ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை திங்கட்கிழமை பங்குனி உத்தர உற்சவம் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகி காலை 9 மணிக்கு சமய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப்பூசை நடைபெறும். 11 மணிக்கு ஸ்ரீமத் நாராயண சுவாமி ஸ்ரீ தேவிபூமாதேவிபுடை சூழ திருவீதி எழுந்தருளுவார். நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும். (68)

# திருக்குளிர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை கன்னாதிட்டி காளியம்பாள் ஆலயத்தின் திருக்குளிர்த்தி விழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு திருக்குளிர்த்தி அபிஷேகமும் ஆராதனைகளும் நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (எஸ்.பி)





## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................................

முகவரி :- ..............................................

பிறந்த ஆண்டு :- ..............................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

### – 239 பேருடன் பறந்து கொண்டிருந்த போது –

# ரஷ்யாவின் தொழில் நுட்ப உதவியுடன் மலேசிய விமானம் கடத்தல்

## அமெரிக்கா வெளியிட்ட புதிய தகவலால் பரபரப்பு



மலேசிய விமானம் 239 பயணிகளுடன் சென்றபோது ரஷ்யாவின் அதிநவீன தொழில் நுட்ப உதவியுடன் கடத்தப்பட்டிருப்பதாக தற்போது அமெரிக்கா பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளது.

உலக பொருளாதாரத்தை தன்கட்டுப்பாட்டில் வைத்திருந்த சீன செல்வந்தர்கள் 4பேர்ரஷ்யகடத்தல் கும்பலால் கண்காணிக்கப்பட்டு வந்தனர். இவர்கள் 4 பேரும் ஒருசேர இந்த விமானத்தில் பயணித்ததை அறிந்த ரஷ்ய கடத்தல் கும்பலைச் சேர்ந்த 2பேர் போலி கடவுச் சீட்டு மூலம அந்த விமானத்தில் பயணித்து சீனா சென்று தரையிறங்கும் முன் அதிநவீன தொழில் நுட்பத்துடன் செயற்கைகோள் கண்ணில்படாமல் ரஷ்யாவிற்கு கடத்திசென றுள்ளனர். அந்தவிமானத்தில் பயணித்த பயணிகளின் உறவினர்கள் விமானநிலையத்தில் கூக்குரல் இட்டபோது சீனஅரசாங்கம் பயணிகளின் உறவினர்களை விமான நிலையத்தில் இருந்து அகற்றி தனியார் விடுதியில் தங்க வைத்தனர். அவ்வுறவினர்களை இரகசியமாக விமானப் பயணிகளிடம் பேசவைத்துள்ளனர்.

இவ்வாறு மலேசிய அரசாங்கமும், சீன அரசாங்கமும் தங்கள் நாட்டிற்கு ரஷ்யா நட்பு நாடு என்பதாலும்இரு நாட்டிற்கும் அவப்பெயர் ஏற்படாமல் இருக்கஇது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகிறது.

மாயமான மலேசிய விமானம், கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்த பிறகு 4 மணி நேரம் பறந்திருப்பதாக அமெரிக்கா திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளது. இந்நிலையில் மாயமான விமானத்தின் அடுத்த தேடுதல் பணியை இந்திய பெருங்கடலில் ஆரம்பிக்கலாம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. இதனையடுத்து தேடுதல் வேட்டையில் பல விமானங்களும், கடற்படை கப்பல்களும் விரைந்துள்ளன.

மலேசியாவில் இருந்து கடந்த சனிக்கிழமை 227 பயணிகள் மற்றும் 12 விமான ஊழியர்களுடன் சீனத் தலைநகர் பீஜிங் புறப்பட்ட விமானம், தெற்கு சீனக்கடலின் மீது பறந்து கொண்டிருந்தபோது திடீரென மாயமானது.

கோலாலம்பூர் விமான நிலைய கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை அது இழந்தது. அது கடலில் விழுந்து மூழ்கியதா? அல்லது வேறு இடத்தில் எங்காவது விழுந்து நொருங்கியதா? என்று இதுவரை தெரியவில்லை. சீனா, மலேசியா, வியட்நாம், சிங்கப்பூர் நாடுகளைச் சேர்ந்த 40 விமானங்கள், 43 கடற்படை கப்பல்கள், தெற்கு கடல் முழுவதும் நேற்று ஏழாவது நாளாக விமானத்தை தேடின. அதேபோல், அந்தமான், மலாக்கா கடல் பகுதிகளில் இந்திய விமானங்கள் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

ஆனால் இதுவரை ஒரு துப்புக் கூட கிடைக்கவில்லை. இந்நிலையில், மலேசியா - வியட்நாம் இடையே விமானம் மாயமானதாக சந்தேகிக்கப்படும் தெற்கு சீனக் கடல் பகுதியில் விமானத்தின் 3 உடைந்த பாகங்கள் மிதப்பதாக சீனா நேற்று தெரிவித்தது.

தனது செயற்கைக்கோள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அவை, மாயமான விமானத்தின் பாகங்கள்தானா என்பது உறுதியாக தெரியவில்லை என்றும் அது தெரிவித்தது. இதைத் தொடர்ந்து, மலேசியாவும் வியட்நாமும் அந்த இடத்துக்கு விமானங்கள் மற்றும் கப்பல்களை அனுப்பின. ஆனால், சீன குறிப்பிட்ட இடத்தில் விமானத்தின் உடைந்த பாகங்கள் எதுவும் இல்லை என்பது உறுதியானது.

இதேபோல், விமானத்தை தேடும் படலத்தில் அமெரிக்காவும் உதவி வருகிறது. இந்நாட்டைச் சேர்ந்த வால் ஸ்டிரீட் பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தி ஒன்றில், 'கோலாலம்பூர் விமான நிலைய கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பை விமானம் இழந்த பிறகும், 4 மணி நேரம் அது பறந்துள்ளது.

விமானத்தின் இயந்திரங்களில் இருந்து கிடைத்த தகவலின் மூலம் இது கண்டறியப்பட்டு உள்ளது. என்று தெரிவிக்கப்பட்டது. விமானத்தின் இயந்திரங்களை பராமரிக்கும் நடவடிக்கையின் ஒரு அம்சமாக, இயந்திரங்களின் செயல்பாடு தரை கட்டுப்பாட்டு அறையுடன் இணைக்கப பட்டு இருக்கிறது. என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

விமானத்தை தீவிரவாதிகள் கடத்திச் சென்று இருக்கலாம் என்ற சந்தேகம் ஒருபுறம் நிலவி கொண்டிருக்கும் நிலையில், அமெரிக்க பத்திரிகை வெளியிட்ட இந்தப்புதிய தகவலால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## விமானத்தின் தொடர்பு திட்டமிட்டு முடக்கப்பட்டுள்ளது

### மலேசிய பிரதமர்

239 பயணிகளுடன் மாயமான விமானத்தின் தொடர்பு திட்டமிட்டு முடக்கப்பட்டுள்ளதாக மலேசிய பிரதமர் நஜீப் ரசாக் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் பயணிகளுடன் மாயமான விமானம் கடத்தப்பட்டிருக்க வாய்ப்பில்லை. அப்படி கடத்தப்பட்டது குறித்து உறுதியான தகவல்கள் எதுவும் இல்லை. அதே நேரத்தில் விமானத்தில் இருந்த தகவல் தொடர்பு கருவி செயலிழக்க செய்யப்பட்டுள்ளது.

விமானத்தில் இருந்த ஒருவரால்தான் இது செயலிழக்கப்பட்டுள்ளது. மாயமான விமானத்தின் கடைசி பயண பதிவு தென்சீனக் கடல்பிராந்தியத்தில் இருந்தது.

இதனால் தென்சீனக் கடல் பரப்பில் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. தற்போது அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் கஜகஸ்தான் முதல் துர்க்மேனிஸ்தான் வரையிலும் இந்தோனேசியா முதல் தென்னிந்தியா வரையிலுமான பகுதிகளில் அடுத்த கட்டத் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் தேடுதல் நடவடிக்கையில் 42 கப்பல்கள், 39 விமானங்கள் ஈடுபட்டுள்ளன. மாயமான விமானத்தை தேடும் நடவடிக்கைக்கு உதவி வரும் அனைத்து நாடுகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

மாயமான விமானத்தில் பயணித்த குடும்பங்களின் உணர்வுகளை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. எங்களது கடமையை நாங்கள் செய்து வருகிறோம் என்றார்.

## "மோடி"க்கு தீர்வுகாண 24மணிநேரம் உழைக்கும் "காங்கிரஸ்"

காங்கிரசிடம் எந்தவொரு செயற்திட்டமும் கிடையாது. மோடியை தடுத்து நிறுத்துங்கள், மோடியை தடுத்து நிறுத்துங்கள் என்று அவர்கள் ஓதிக் கொண்டிருக்கிறார்கள். என பா.ஜ.க.வின் பிரதம மந்திரி வேட்பாளர் நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக 24 மணி நேரமும் நான் உழைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் அவர்களோ மோடிக்கு தீர்வு காண்பதற்காக 24 மணி நேரமும் உழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நான் நாட்டின் வளர்ச்சிக்காக, வேலை வாய்ப்புக்களை உருவாக்கு வதற்காக, வளத்தை



ஏற்படுத்து வதற்காக, ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதற்காக அரசியல் செய்து விரும்புகிறேன். மக்கள் எனக்கு ஆசி வழங்குங்கள். இல்லாவிட்டால் உலகம் முன்னோக்கி சீறிப் பாய்ந்துவிடும். நாம் பின்தங்கி விடுவோம்.

உலகச் செய்திகள்

## இந்தியாவில் அறிமுகமாகின்றது சூரிய சக்தி கழிப்பறை



இந்தியாவில் சூரிய சக்தி உதவியுடன் இயங்கக்கூடிய கழிப்பறை அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

அமெரிக்காவில் செயற்பட்டு வரும் பில் மற்றும் ஆம்ப் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையின கழிவறைகளுக்கு ஒரு புதிய வடிவம் கண்டுபிடிக்கும் திட்டத்தின் கீழ் 7,77,000 டொலர் நன்கொடையில் இந்தப் புதிய கழிப்பறை உருவாக்கப்பட்டுள்ளது.

இது நீரின் தேவையின்றி சூரிய சக்தியின் உதவியுடன் மனிதக் கழிவுகளை அதிக வெப்பத்தில் நுண்ணிய கரியாக மாற்றும் தன்மை கொண்டுள்ளது.

அவ்வாறு பெறப்படும் நுண்ணிய கரி பயிர் விளைச்சலை அதிகரிக்கவும், பசுமை வாயு எனப்படும் தனிமைப்படுத்தப்பட்ட கார்பன் டை ஒக்ஸைடைத் தயாரிக்கவும் பயன்படும் என்று குறிப்பிடப்படுகின்றது.

சுற்றுச்சூழல் நட்புறவினை வெளிப்படுத்தும் இந்தத் திட்டம் உலகளவில் பாதுகாப்பான மற்றும் நிலையான சுகாதாரம் கிடைக்கப்பெறாத 2.5 பில்லியன் மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்று இந்தத் திட்டத்தின் முக்கிய ஆய்வாளரும், கொலொராடோ பல்கலைக் கழகத்தின் பேராசிரியருமான கார்ல் லிண்டன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், திட மற்றும் திரவ கழிவுப் பொருட்களை சுத்தப் படுத்தாமல் பயனுள்ள இறுதிப் பொருட்களாக உருவாக்கக் கூடிய இந்தக்கழிவறைகள் அடுத்த தலைமுறையினருக்கானது என்று கூறியுள்ளார்.

மேலும் தற்போதைய கண்டுபிடிப்பு ஒரு நாளைக்கு நான்கிலிருந்து ஆறு பேருக்கு உபயோகமானதாக இருக்கும். இதே போல் குறைந்த செலவில் மேம்படுத்தப்பட்ட நிலையில் பல குடும்பங்களுக்குப் பயனளிக்ககூடிய வடிவமைப்புகள் தங்களது தயாரிப்புத் திட்டத்தின் கீழ் இருப்பதாக கூறியுள்ளார்.

## உக்ரேன் விவகாரம் தொடர்பான ரஷ்ய- அமெரிக்க பேச்சு தோல்வி



உக்ரேன் விவகாரம் தொடர்பான ரஷ்யா-அமெரிக்கா பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்துள்ளது.

சமீபத்தில் உக்ரேனில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் கிரைமியா பகுதியை ரஷ்ய இராணுவம் ஆக்கிரமித்தது. அதற்கு கிரைமியா பகுதியைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் ஆதரவு தெரிவித்தனர். இதே வேளை, உக்ரேனிடம் இருந்து விடுதலை பெற்று ரஷ்யாவுடன் இணைய கிரைமியா விருப்பம் தெரிவித்தது. இதற்கான தீர்மானம் கிரைமியா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து கிரைமியா உக்ரேனிடம் இருந்து சுதந்திரம் பெற்றதாக அறிவித்தது.

மேலும், ரஷ்யாவுடன் கிரைமியா இணைவதற்கான பொது வாக்கெடுப்பு நடைபெற உள்ளது.

இந்நிலையில், லண்டனில் நேற்று முன்தினம் உக்ரேன் விவகாரத்தை முடிவுக்கு கொண்டுவர ரஷ்யா மற்றும் அமெரிக்க நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

சுமார் ஆறு மணிநேரம் வரை நீடித்த இந்தப் பேச்சுவார்த்தையில் அமெரிக்காவின் தரப்பில் இருந்து கிரைமியாவின சமரசத்திற்கு அதிகபட்ச ஆட்சி அதிகாரம், ரஷ்யர்களுக்கான உரிமைகளை பாதுகாக்கும் நடவடிக்கைகள் குறித்து பல யோசனைகள் முன் வைக்கப்பட்டன. ஆனால் உக்ரேன் விவ்காரத்தில் இருநாடுகளிடமும் பொதுவான பார்வை இல்லை என ரஷ்யா மறுத்துவிட்டது. மேலும், பொதுவாக்கெடுப்பு முடியும் வரை இவ்விவகாரத்தில் எந்த முடிவையும் எடுக்க ரஷ்யா விரும்பவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

இதையடுத்து பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

பேச்சுவார்த்தையின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் ஜோன் கெர்ரி, அமெரிக்கா மற்றும் சர்வதேச நாடுகள் கிரைமியாவின் பொது வாக்கெடுப்பை ஏற்றுக்கொள்ளாது. அவ்வாறு நடாத்துவது சர்வதேச விதிகளுக்கு எதிரானது என்றார்.

# வடபகுதியின் அபிவிருத்தித் திட்டத்திற்கு பேருதவியாக இருப்பவர் அமைச்சர் டக்ளஸ்

## பிரதியமைச்சர் வீரகுமார புகழாரம்



(யாழ்ப்பாணம்)

வடபகுதியின் அபிவிருத்திக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரசின் பிரதிநிதியாக இருந்து கொண்டு பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் பிரதியமைச்சர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சங்கானையில் நேற்று இடம்பெற்ற யாழ். மாவட்ட பெண்களுக்கான சுயதொழிலை மேம்படுத்துவதற்கான (பற்றிக்) பயிற்சித் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் இப்பகுதியின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.

இப்பேற்பட்ட உதவித் திட்டங்கள் கிடைக்கப் பெறுவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உங்கள் மீது வைத்துள்ள கரிசனையும் அன்பும்தான் காரணமாக அமைந்துள்ளது.

கடந்த யுத்த காலப் பகுதியில் பாரிய அழிவையும் சேதங்களையும் சந்தித்திருந்த இப்பகுதியின் அபிவிருத்திக்காக அமைசசர், அரசின் பிரதிநிதியாக இருந்து கொண்டு பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுத்துவரும் நிலையில் அதனொரு கட்டமாகவே இப்பயிற்சித் திட்டமும் அமைந்துள்ளதுடன், வடபகுதிக்கும் தென்பகுதிக்கும் இடையிலான ஒரு நல்லுறவுப் பாலமாகவும் அமைச்சர் இருந்து வருகின்றார் என்றும் சுட்டிக்காட்டினார்.

உலகின் பல்வேறு நாடுகளில் பற்றிக் தொழிற்துறை காணப்படுகின்ற நிலையில் அதனை இங்கும் அறிமுகம் செய்து வைத்துள்ள அதே வேளை, அதனூடாக இங்குள்ளவர்களும் உரிய பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பாக யாழ்ப்பாண பற்றிக் என்ற தனித்தன்மையுடன் இப்பகுதியின் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களுடன் கூடியதாக உற்பத்திகளை முன்னெடுக்க வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினது வழிகாட்டலின் கீழ் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமை மற்றும் ஆலோசனைக்கு அமைவாக நான் கண்ணுற்றுள்ள கடந்த ஒன்றரை வருடங்களில் வடபகுதியில் பல்வேறுபட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதை உணர முடிகின்றது. இவ்வாறான அபிவிருத்திகள் ஊடாக பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண வேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

நாடளாவிய ரீதியில் அமைச்சினால் பல்வேறு தொழிற்துறை மேம்பாட்டு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் வடமாகாணத்திலும் பல்வேறு செயற்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனூடாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மென்மேலும் மேம்படுத்த முடியும். எனவே, இதனை உணர்ந்து கொண்டவர்களாக இப்பகுதியின் அபிவிருத்திக்கும் உங்களது வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் அமைச்சரின் சிறந்த வழிகாட்டலுடன் முன்னேற்றம் காண வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

### அடிப்படையற்ற...

அரசியல் நோக்கங்களுக்காக சனல் 4 ஊடகம் போலித் தகவல்களை வெளியிட்டு வருகிறது.

அரசியல் ரீதியாக முக்கியமான தருணங்களில் சனல் 4 ஊடகம் ஆவணப்படங்களை வெளியிட்டு வருவதாகவும் அவர மேலும் தெரிவித்துள்ளார்.

### கல் ஏற்றி...

பாதையை ஊடறுத்துச் செல்லும் வீதியால் பயணித்துக் கொண்டிருக்கையில் கொடிகாமம் பகுதியில் நடைபெற்று வரும் ரயில் பாதை புனரமைப்புப் பணிகளுக்கு கல் ஏற்றிவந்த ரயில் மோதி விபத்துக்குள்ளாகியதாக தெரியவருகிறது.

இவ்விபத்தின்போது உயிரிழந்தவர் பயணித்த மோட்டார் சைக்கிள் சுமார் நூறு மீற்றர் தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்டதுடன், படுகாயங்களுக்குள்ளாகிய அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி அங்கு உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

### பாடசாலை...

முறிகண்டி அ.த.க. பாடசாலையில் மாணவர்களுக்கான மாலைநேர வகுப்புக்கள் நடைபெற்றன. குறித்த வகுப்புக்கள் நிறைவடைந்து மாலை 5.30 மணியளவில் மாணவர்கள் துவிச்சக்கர வண்டியிலும் நடந்தும் வீடு நோக்கி வந்த வேளை சுமார் எட்டிற்கும் மேற்பட்ட யானைகள் மாணவர்களைத் துரத்தின. இதன்போது யானைகளிடமிருந்து பாதுகாப்புத் தேடி ஓடிய மாணவர்கள் விழுந்து காயமடைந்த நிலையில் அச்சத்துடன் வீடு போய்ச் சேர்ந்தனர்.

இந்த வீதியில் வழமையாக இரவு வேளையிலேயே யானைகள் நிற்பதாகவும், ஆனால் நேற்றைய தினம் மாலையே வீதிக்கு யானைகள் வந்து விட்டதாகவும் ஊர்மக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு மாலை வேளையில் யானைகள் வீதியில் நிற்பதனால் தாம் மிகவும் அச்சத்துக்குள்ளான நிலையில் உள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

### போர் முடிவிற்கு...

நிகழ்வில் கலந்துகொண்ட இலங்கைக்கான சீனத் தூதுவர் வூ ஜியங்ஹு இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர், நாடு முழுவதும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை காணமுடிகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இலங்கையின் தூதுவராக பணியாற்றி வருவதால், கொழும்பு மட்டுமல்லாது நாட்டின் ஏனைய பிரதேசங்களின் வளர்ச்சி தொடர்பில் தனிப்பட்ட ரீதியாக சாட்சியாக இருக்க முடியும்.

பயங்கரவாதத்தை தோற்கடித்த பின்னர் மேலும் பலவற்றை செய்ய வேண்டியுள்ளது. இலங்கை தனது சாதனைகளால் தற்போது மிகவும் பிரபலமான நாடாக மாறியுள்ளது.

இலங்கை ஏன் முன்னேற்றமடையவில்லை என்று மக்கள் என்னிடம் கேட்டனர். இலங்கை மிக வேகமாக முன்னேறி வருகிறது என்று நான் கூறினேன்.

இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு சீனா உதவும் என்றார்.

### தீர்மானத்திற்கு...

கடந்த வியாழக்கிழமை லண்டனில் அவர், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக்கை இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது, இலங்கையின் நிலைமைகள் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவுடன், இணைந்து இலங்கைக்கு எதிராக பிரித்தானியா தீர்மான வரைவை முன்வைத்துள்ள நிலையில், இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு நாடுகளிடம் ஆதரவு திரட்டி வருவதாக பிரித்தானியா ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில், இந்தத் தீர்மானத்துக்கு இந்தியாவின் ஆதரவை வில்லியம் ஹேக் கோரியதாக தெரியவந்துள்ளது.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின் போது, இந்தியாவின் அண்டைநாடுகள் தொடர்பான விவகாரங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாக, இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளது.

பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு, இரண்டு நாடுகளும் தமக்கிடையில் ஒத்தநிலைப்பாட்டை கொண்டிருப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியினது எதிர்கால அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 19 ஆம் திகதி புதன் கிழமை காலை 10.00 மணியளவில் வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் யாழ். பண்ணையில் அமைந்துள்ள வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தில் அமைந்துள்ள கேட்போர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி சியாமா துரைரத்தினம் தெரிவித்துள்ளார். (05)

# பொலிஸ் பாதுகாப்பு யாழில் நேற்று அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் முன்னணி பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் காரணமாக நேற்று யாழ். நகரில் பொலிஸார் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 50 ஓவர் கிரிக்கெட் போட்டியின் போது பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவன் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படும் சம்பவத்தை அடுத்தும் சென்றல் - சென். ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான இருநாள் இனிங்ஸ் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று போட்டி இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பில் மாணவர்கள் மத்தியில் எழுந்த பதற்றமான சூழலை அடுத்தே பொலிஸார் இவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கென யாழ்ப்பாணத்தின் ஏனைய பொலிஸ் நிலையங்களிலிருந்தும் மேலதிகமாக பொலிஸார் யாழ். நகரிற்கு அழைக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கை பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் கலகமடக்கும் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

### அடித்துக்...

டி.எஸ்.சொலமனிடம் வினவியபோது, மிகவும் துயரமான சம்பவம் ஒன்று இங்கு இடம்பெற்றுள்ளது. மோதலில் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவன் பலியானது மிக வேதனையாகவுள்ளது.

இச்சம்பவத்தால் கல்லூரி சமூகத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், இத்துயரச் சம்பவத்தில் இறந்த மாணவனின் ஆத்மசாந்தி அடைய பிரார்த்திக்கின்றேன் என்றார். (பா,92,48)

### சங்கானையில்...

இதன்மூலம் இளம் யுவதிகளினது சுயதொழில் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மகிந்த சிந்தனைக்கு அமைவாக நடப்பாண்டில் பெண் தொழில் முயற்சியாளர்களை பலப்படுத்தும் வகையில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் வடமாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி விளக்கவுரையாற்றினார். அத்துடன் பிரதியமைச்சர் வீரகுமார திஸாநாயக்க, வடமாகாண ஆளுநர் சந்திரசிறி, பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், கொழும்பு றோட்டறிக் கழக உறுப்பினர் சரவணபவன் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் தையல் இயந்திரங்கள், துணிவகைகள், கைப்பணிகளுக்குத் தேவையான உபகரணங்கள் தொலைக்காட்சிப் பெட்டிகள் அலுவலக செயற்பாட்டுக்கென மடிக்கணனி உள்ளிட்ட பல்வேறுபட்ட தொழில்சார் உபகரணங்கள் அமைச்சரால் கையளிக்கப்பட்டன.

இதன்போது பயனாளிகள் உள்ளிட்ட துறைசார்ந்தோருடன் அமைச்சர் கலந்துரையாடி அவர்களது தேவைகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

இதில் சங்கானை பிரதேச செயலர் சோதிநாதன், அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி குகேந்திரன், ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### சட்டவிரோத...

போராட்டம் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினதும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்ஸினதும் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில், அக்கட்சியின் பொதுச்செயலாளர் கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் மணிவண்ணன், ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச்செயலர் பாஸ்கரா, மனித உரிமை செயற்பாட்டாளர் பிரிட்டோ, Right to Life பெண்கள் மனித உரிமை அமைப்பினர், கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம், வடமாகாண சுகாதாரத்துறை அமைச்சர் சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்கள், வைத்தியகலாநிதி சி.சிவமோகன், ரவிகரன், தியாகராசா, மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத்தலைவர் செபமாலை அடிகளார்,

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுத்தலைவர் கி.தேவராசா, வவுனியா மாவட்ட காணாமல் போன உறவுகளைத் தேடும் சங்கத் தலைவி பாலேஸ்வரி, மீளக்குடியமர்ந்தோர் நலன் பேணும் அமைப்பின் தலைவர் மகேந்திரம், காணாமற் போன தம் உறவுகளை தேடும் குடும்பங்கள், தம் பிள்ளைகளின் விடுதலைக்காக ஏங்கும் குடும்பங்கள், சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கை குறித்து பொதுநலவாயம் சரியாகவே செயற்பட்டு வருகின்றது



## கூறுகிறார் செயலாளர் கமலேஷ் சர்மா

இலங்கை விவகாரத்தில் பொதுநலவாய நாடுகள் அமைப்பு எதனையும் செய்யவில்லை என்பது பிழையானது என அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரம் தொடர்பில் பொதுநலவாய நாடுகள் அமைப்பு பல்வேறு வழிகளில் கடமைகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது சில இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

பத்து வெவ்வேறு விடயங்கள் தொடர்பில் பொதுநலவாய நாடுகள் அமைப்பு கவனம் செலுத்தி வருவதாகவும், இதனை அமைப்பின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பார்வையிட முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை, சித்திரவதைகள், நல்லிணக்கம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கையுடன் இணைந்து செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சட்டம், ஒழுங்கு மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்த இலங்கைக்கு உதவிகளை வழங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரங்களில் பொதுநலவாய நாடுகள் அமைப்பு எதனையும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு அடிப்படையற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உள்நாட்டு ரீதியான அடிப்படையைக் கொண்ட அணுகு முறைகள் மூலமான தீர்வுத் திட்டங்களே நிலைத்திருக்கும் எனவும் அதன் அடிப்படையில் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



வல்வை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி ஆலய தேர்த்திருவிழா நேற்றைய தினம் வெகு சிறப்பாக இடம்பெற்றதனைக் காணலாம். (116)

# கடந்த கால வெளி நாட்டுக் கொள்கையே வெளிநாட்டுப் படையினர் வரக்காரணம்

## ஜனாதிபதி குற்றச்சாட்டு.

(கொழும்பு)

இந்தியாவின் தலையீட்டுக்கு வழிவகுத்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

காலி - மாத்தறைக்கு இடையிலான புதிய அதிவேக நெடுஞ்சாலையை நேற்றைய தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் பெயரையோ இந்தியாவையோ ஜனாதிபதி பெயரிட்டு சுட்டிக் காட்டவில்லை.

எனினும் கடந்த கால அரசாங்கங்களின் வெளிநாட்டுக் கொள்கைகள் காரணமாக விடுதலைப் புலிகளுடன் போர் நடைபெற்ற காலத்தில் அரசாங்கத்தின் படைகள் முகாம்களுக்குள் முடக்கப்பட்டதுடன் வடக்கில் வெளிநாட்டு துருப்புகள் நிலை கொள்ள வழிவகுத்தது.

கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களின் தளர்வான வெளிநாட்டுக் கொள்கை காரணமாக வெளிநாட்டவர்கள் இலங்கையின் வான்பரப்பில் ஊடுருவி வடக்கில் பருப்பை போடுவதற்கு வழிவகுத்தது.

போருக்குப் பின்னர் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தியை முடக்க பல்வேறு வகையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சர்வதேச அழுத்தங்களும், தீர்மானங்களும் அப்படியான தலையீடுகளைச் செய்யவே மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த முயற்சிகளுக்கு எதிர்க் கட்சிகளும் பங்களிப்பு செய்து வருகின்றன எனவும் ஜனாதிபதி குற்றம் சுமத்தியுள்ளார்.

# கற்களுக்கு வெடிவைத்த சிறுப்பிட்டி வாசி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறுப்பிட்டி தெற்குப் பகுதியில் தனது வீட்டு வளவுக்குள் இருந்த கற்களுக்கு வெடி வைத்துத் தகர்க்க முற்பட்ட அதே இடத்தினைச் சேர்ந்த கிட்டினன் பரராஜசிங்கம் (வயது-48) என்பவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

தனது வீட்டு வளவுக்குள் இருந்த பாரிய கற்களை உடைக்கும் நோக்குடன் வெடி வைத்துவிட்டு நீண்டநேரமாகியும் அது வெடிக்காதத்னால் கற்களை விலக்கி பார்க்க முற்பட்ட வேளையில் வெடி வெடித்ததில் மேற்படி நபர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# கடை உடைத்து திருட்டு



(வடமராட்சி)

வடமராட்சி புறாப்பொறுக்கி, ஆலடிப் பகுதியில் அமைந்துள்ள பலசரக்கு கடை நேற்று முன்தினம் இரவு உடைக்கப்பட்டு திருட்டுப் போயுள்ளது.

'சின்னத்துரை ஜெயச்சந்திரன் என்பவரின் கடையின் முன் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் பால்மா வகைகள் உட்பட பெறுமதியான பலசரக்குப் பொருட்களை திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் குறித்து கடை உரிமையாளரால் நெல்லிடிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (18)

# சோதனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உள்ளக வீதிகளில் நேற்றிரவு இராணுவத்தினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்றிரவு 8..00 மணியிலிருந்து 10.00 மணி வரையில் வீதிகளில் சென்றோரின் அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (67)

# கச்சதீவு திருவிழா நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இந்தியா, இலங்கை இரு நாட்டு மக்கள் இணைந்து கொண்டாடும் புனித கச்சதீவு அந்தோனியார் திருவிழா நேற்று மாலை 4.00 மணியளவில் கச்சதீவில் தொடங்கியது. கச்சத்தீவு புனித அந்தோனியார் திருவிழாவை யாழ். மறை மாவட்ட பேராயர் அருட்திரு. தோமஸ் சவுந்திரநாயகம் ஆலயக் கொடியை ஏற்றி திருவிழாவை தொடக்கி வைத்தார்.

முன்னதாக கச்சதீவு அந்தோனியார் திருவிழாவில் தமிழகத்திலிருந்து பங்கேற்பதற்காக 3 ஆயிரத்து 460 பேர் விண்ணப்பித்து இருந்தனர். ஆனால் 3 ஆயிரத்து 432 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது.

இன்று காலை சிறப்பு திருப்பலி பூஜையும், அந்தோனியார் தேர்ப்பவனியும் நடைபெறும்.

ராமேஸ்வரம் வேர்க்கொடு அருட்தந்தை சகாயராஜ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும். இதனைத் தொடர்ந்து கொடியிறக்கமும் நடைபெற்று விழா முடிவடையும்.

5வது ஆண்டில் சிகரம் காலடி வைத்ததை ஒட்டி
மார்ச் 24 முதல் 30 வரையில்
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாடு

அனைத்து முன்னணி நாடுகளுக்குமான
வெளிநாட்டு கல்வி - தொழில் விசா அனுமதிகள்
(உங்கள் தெரிவுக்கு 15க்கு மேற்பட்ட நாடுகள்)

சிகரம் Sikaram
Gateway to Education & Employment

America, Canada, Australia, UK, New Zealand, Switzerland, France, Germany, Italy, China, Latvia, Cyprus, Malaysia, Dubai, DOHA, Qatar, Bahrain, UAE உள்ளிட்ட பல நாடுகளுக்கான...

Student Visa, Dependant Visa, Work Permit, Skilled Migration Visit Visa & Visa Rejection Appeals
( நிராகரிக்கப்பட்ட விசா மீள்விண்ணப்பம் )

MBBS, Engineering, Business, IT, Hotel Management Diploma, Bachelors, Masters, PhD & Work Permits

உங்களுக்கு என்ன வேண்டுமோ... அத்தனையும் இனி எம்மிடமே...

முற்பதிவு அவசியம் 077 36 16 798 0777 324 004

அனுமதி பெறும் அனைவருக்கும் 3 மாத கால ஆங்கிலம், தொடர்பாடல் திறன்விருத்தி & ஆளுமை விருத்திப் பயிற்சி
முற்றிலும் இலவசம் C/3372)

சிகரம் கல்வி-தொழில் வாய்ப்புக்களுக்கான நுழைவாயில்
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
021 222 00 11 www.sikaram.lk fb: Edu Sikaram

# மரண அறிவித்தல்

## வடிவேலு சிவசுப்பிரமணியம்



வடமராட்சி கற்கோவளத்தைப் பிறப்பிடமாகவும், வண்.வடமேற்கு நாவலடி ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் 14.03.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் கற்கோவளம் வடிவேலு மாணிக்கம் தம்பதியின் மகனும், யாழ்.நாச்சிமார் கோவிலடி சின்னராசா பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற செல்வராணியின் (புஸ்பா) அன்புக் கணவரும்; காலஞ்சென்ற இரகு (தலைவர், முன்னாள் யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்), மாலதி (பிரான்ஸ்), தயாநிதி, ஜெயாநிதி, நந்தினி, ரஜனி ஆகியோரது அருமைத் தந்தையும்; அன்னராஜா (பிரான்ஸ்), ர்விச்சந்திரன் (டோகா), பிரிட்டோ, நவநீதன், நிக்ஷன் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (16.03.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நாவலடி ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
0755065975
0778065936
92/7 , நாவலடி ஒழுங்கை,
வண்.வட மேற்கு, யாழ்ப்பாணம்.

தகவல் :
மகள் : தயாநிதி

(இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மார்ச் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.